பக்கங்கள் : எட்டு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 ஆனி 29 வெள்ளிக்கிழமை (13.07.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 226

## அரசுடன் பேசுவது சாத்தியமே இல்லை

### புலிகளின் அரசியல் பொறுப்பாளர்



கிளிநொச்சி, ஜூலை 13

போர்த் தீவிரத்தில் வெறிகொண்டு, யுத்த முனைப்புடன் செயற்படும் மஹிந்த ராஜபக்ஷ வின் இந்த அரசுடன் அமைதிப் பேச்சு சாத்தியப்படாது. சமாதான முயற்சிகளுக்கும் வாய்ப்பு இல்லை.

- இவ்வாறு விசனத்துடன் கூறியிருக்கின்றார் விடுதலைப் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச் செல்வன்.

கிளிநொச்சியில் வெளிநாட்டுச் செய்தியாளர் ஒருவருக்குக் கருத்து வெளியிட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார் என இணையத்தளச் செய்திகள் குறிப்பிட்டன.

போர்த் தீவிரத்தில் ஒரே முனைப்பாக மஹிந்த ராஜபக்ஷ அரசு இருக்கின்றது. அதனோடு அமைதிப் பேச்சுகளை நடத்துவது என்பது அபத்தமானது.

சர்வதேசப் பங்களிப்போடு உருவாக்கப்பட்ட யுத்த நிறுத்த ஒப்பந்தமே எந்த அமைதிப் பேச்சுக்கும், எத்தகைய சமாதான முயற்சிக்கும் அடிப்படை இழையாக இருக்க முடியும்.

அந்த ஒப்பந்தத்தை முழு அளவில் ஏற்று நடைமுறைப்படுத்த மஹிந்தரின் அரசு தயா

(08 ஆம் பக்கம் பார்க்க)

## பேச்சுக்கு அழைக்க இப்போது ஆர்வமில்லை

### அரசின் அமைச்சர் அறிவிப்பு



கொழும்பு, ஜூலை 13

"தொப்பிகல பகுதியைக் கைப்பற்றி, கிழக்கு முழுவதையும் தனது முழுக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்து, வரலாற்றில் என்றுமில்லாத வகையில் வெற்றியின் உச்சியில் நிற்கும் அரசு, புலிகளுடன் உடனடியாகப் பேச்சு நடத்தும் நிலையில் இல்லை.

- இவ்வாறு ஊடகத்துறை அமைச்சர் அநுர பிரியதர்சன யாப்பா நேற்றுத் தெரிவித்தார்.

"புலிகளுடன் பேச்சு நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதிலோ அல்லது புலிகளைப் பேச்சு மேசைக்கு அழைப்பதிலோ அரசுக்குத் தற்போதைக்கு ஆர்வம் இல்லை.

"கைப்பற்றப்பட்ட கிழக்கை அபிவிருத்தி செய்து, அப்பகுதி மக்கள் நிம்மதியாக வாழ்வதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொடுப்பதில்தான் அரசு தீவிரமாகவும் சிரத்தையாகவுமுள்ளது. கிழக்கு கைப்பற்றப்பட்டதன் மூலம் அங்கு இவ்வருட இறுதியில் மாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்கான வாய்ப்பும் கிட்டியுள்ளது." என்றும் அவர் கூறினார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று

(08 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா வடக்கில் கிபிர் விமானம் மீது தாக்குதல்; அதன் பாகங்கள் மீட்கப்பட்டதாக புலிகள் அறிவிப்பு

கிளிநொச்சி, ஜூலை 13

வவுனியா வடக்குப் பகுதியில் எமது கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் குண்டுவீச்சுத் தாக்குதலை நடத்த நுழைந்த 'கிபிர்' விமானம் மீது நேற்று மாலை 3 மணியளவில் தாக்குதல் நடத்தியதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர். இதனால் அந்த விமானம் சேதமடைந்ததாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

தங்களது தானியங்கு விமான எதிர்ப்புப் பீரங்கி அணியினரே விமானத்தைச் சுட்டனர் என்றும் -

அதனால் விமானத்தின் அடிப்பாகங்கள் தமது பகுதிக்குள் வீழ்ந்தன என்றும் -

அந்தப் பாகங்கள் தங்களால் மீட்கப்பட்டுள்ளன என்றும் - விடுதலைப்

(08 ஆம் பக்கம் பார்க்க)

### தவறான தகவல் என்று அரசாங்கம் மறுப்பு

கொழும்பு, ஜூலை 13

"எமது விமானப்படையைச் சேர்ந்த கிபிர் விமானமோ, அல்லது வேறு எந்த விமானமோ எவ்வித தாக்குதலுக்கும் உள்ளாகவில்லை. எதுவும் வீழ்ந்து நொருங்கி விடவும் இல்லை. இது ஒரு முழுமையான தவறான தகவல்."

(08 ஆம் பக்கம் பார்க்க)

## சமாதானத்தை விரும்புவோரின் வெற்றியே தொப்பிகல மீட்பு

### கோத்தபாய ராஜபக்ஷ கூறுகிறார்



கொழும்பு, ஜூலை 13

"கிழக்கை மீட்பதற்காக ஆரம்பிக்கப்பட்ட நடவடிக்கையில் புலிப் பயங்கரவாதிகளின் கிழக்குக் கோட்டையான தொப்பிகல கைப்பற்றப்பட்டுள்ளமை பாதுகாப்புப் படையினருக்கு மாத்திரமல்ல இப் பிரதேசங்களில் வாழும் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களுக்குக் கிடைத்த பாரிய வெற்றியாகும்."

- இவ்வாறு பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ அமெரிக்காவிலிருந்து விடுத்த செய்தியொன்றில் தெரிவித்துள்ளார்.

2006 ஜூலை மாதம் 21ஆம் திகதி மாவிலாறு அணைக்கட்டை மூடிய புலிப் பயங்கரவாதிகளிடமிருந்து அந்த அணைக்கட்டை விடுவிப்பதற்கான நோக்கில் அரசு மனிதாபிமான இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்தது. இதன்மூலம் சம்பூர், வாகரை, கொக்கட்டிச்சோலை ஊடாக தொப்பிகல வரை பயங்கரவாதிகளைத் தோற்கடித்து புலிகளின் பிரதான கோட்டையான தொப்பிகலவை பாதுகாப்புப் படையினர் கைப் பற்றி உள்ளனர்.

ஜனாதிபதி, பதவியேற்றதோடு முப்படைத் தளபதிகளுக்கும் பொலிஸ் மா அதிபருக்கும் வழங்கிய சரியானதலைமைத்துவமே இந்த வெற்றிக் கான பிரதான கார

(08 ஆம் பக்கம் பார்க்க)

## ரெலோவின் வவுனியா அலுவலகத்தை படையினர் சுற்றிவளைத்துத் தேடுதல்

### துப்பாக்கிச் சூட்டில் உறுப்பினர் ஒருவர் பலி

கொழும்பு, ஜூலை 13

வவுனியா, பண்டாரிக்குளத்தில் உள்ள ரெலோவின் மாவட்ட அலுவலகம் நேற்று முற்பகல் படையினரால் சுற்றிவளைக்கப்பட்டது. அப்போது படையினர் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் ரெலோ உறுப்பினரான - இரண்டு பிள்ளைகளின் தந்தை ஒருவர் - அந்த இடத்திலேயே உயிரிழந்தார். மற்றைய மூன்று ரெலோ உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டனர்.

தங்கள் மீது இந்நபர் கைக்குண்டுத் தாக்குதல் நடத்த முற்பட்டபோதே தற்காப்புக் கருதி அவரைத் தாங்கள் சுட்டுக் கொன்றனர் என்று படைத்தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

நேற்றுக்காலை 8.30 மணியளவில் மேற்படி ரெலோ அலுவலகம் படையினராலும் பொலிஸாராலும் சுற்றி வளைக்கப்பட்டது.

அலுவலகத்துக்குள் இருந்த தியாகு என்று அழைக்கப்படும் செங்கோடன் தியாகராஜா என்ற ரெலோ உறுப்பினரே படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

அவரது சடலத்தின் மார்புப் பகுதியில் கிரனேட் ஒன்று பின்னர் காணப்பட்டதாக முதலில் கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

ரெலோ அலுவலகத்துக்குள் நுழைந்த படையினர் அங்கு ஒவ்வொரு அறையையும் சல்லடை போட்டுத் தேடினர் என்றும் மூடிய அறை ஒன்றைத் திறக்குமாறு அங்கு நின்றவர்களிடம் அவர்கள் கூறினர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அதற்கு அலுவலகப் பொறுப்பாளரின் அறை அது என்றும், அதற்குரிய திறப்பு அவரிடம்தான் உள்ளது என்றும் அவர்கள் பதிலளித்துள்ளனர் என்றும் கூறப்பட்டது.

இந்தப் பதிலை செவிமடுக்காத இராணுவத்தினர் உடனடியாக அதிரடிப்படையினரை வரவழைத்தனர். அச்சமயமே செங்கோடன் தியாகராஜா சுட்டுக் கொலை செய்

(08 ஆம் பக்கம் பார்க்க)

## மன்னாரில் நேற்று சிப்பாய் பலி

கொழும்பு, ஜூலை 13

மன்னார் இளஞ்சேனைப் பகுதியில் நேற்று நண்பகல் இடம்பெற்ற மோட்டார் தாக்குதலில் இராணுவச் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார் என்று தேசிய பாதுகாப்பு ஊடக மத்திய நிலையம் தெரிவித்தது.

## அரசியல் ரீதியான வெற்றியாகவே தொப்பிகல மீட்புப் பார்க்கப்படுகிறது

### இராணுவ ஆய்வாளர் இக்பால் அத்தாஸ் கூறுகிறார்



இலங்கையின் கிழக்கே உள்ள தொப்பிகல பகுதியை இராணுவம் கைப்பற்றியுள்ளமை இராணுவரீதியாக முக்கியமானதுதான் ஆனால், இது அரசியல் ரீதியாகவே பார்க்கப்படுகிறது.

இவ்வாறு பிரபல பாதுகாப்பு விமர்சகரும் ஆய்வாளருமான இக்பால் அத்தாஸ் தெரி வித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

சம்பூர், வாகரை போன்ற பகுதிகளில் இருந்து இலங்கை இராணுவத்தினரால் வெளியேற்றப்பட்ட விடுதலைப் புலிகள் தொப்பிகல பகுதிக்கு வந்த பின்னர் அங்கிருந்து இராணுவம் அவர்களை வெளியேற்றியமை, இலங்கை அரசைப் பொறுத்தவரையில் ஒரு வெற்றிதான்.

**பதில் இனிவரும் வாரங்களில் தெரியும்**

ஆனாலும், கைப்பற்றிய பிரதேசங்களை அரசு எவ்வளவு காலம் தக்கவைத்துக் கொள்ள முடியும் என்பது கேள்விக்குரிய ஒன்று. இதற்கான பதில் இனிவரும் வாரங்களில் அல்லது மாதங்களில் தெரியவரும்.

13 வருடங்களுக்கு முன்னரும் இதேபோன்றதொரு

(08 ஆம் பக்கம் பார்க்க)

## விமானப்படையின் சோதனைச் சாவடியில் பொலிஸ் வாகனம் மீது சூடு! இருவர் காயம்!!

### கட்டுநாயக்க - நீர்கொழும்பு இடையே அதிகாலையில் சம்பவம்

கொழும்பு, ஜூலை 13

கட்டுநாயக்க - நீர்கொழும்பு பிரதான வீதியிலுள்ள விமானப் படையினரின் வீதிச் சோதனை நிலையத்தின் ஊடாகச் சென்ற பொலிஸாரின் வாகனம் ஒன்றின்மீது, விமானப் படையினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதில் பொலிஸ் அதிகாரிகள் இருவர் படுகாயமடைந்திருக்கின்றனர்.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ளது.

பொலிஸாரின் குழுவொன்று மரண வீட்டு நிகழ்வு ஒன்றுக்குச் சென்றுவிட்டு திரும்பும் வழியிலேயே இச்சம்பவம் நிகழ்ந்துள்ளது.

இந்த வாகனத்தில் அச்சமயம் மொத்தம் 11பேர் பயணம் செய்தனர் என்று கூறப்படுகின்றது.

இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் கவனக் குறைவு அல்லது தவறுதலாக இடம்பெற்றதா அல்லது திட்டமிட்ட செயலா என்பது குறித்து பொலிஸ்மா அதிபர் விக்டர் பெரேராவின் கட்டளையின் பேரில் தீவிர விசா

(08 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கில் ஒரு லட்சத்து 78 ஆயிரம் பொதுமக்கள் புலிகளின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டனர்

## இராணுவப் பேச்சாளர் பெருமிதம்



கிழக்கு மாகாணம் முற்றாக மீட்கப்பட்டதன் மூலம் புலிகளின் கட்டுப்பாட்டிற்கு கீழ் இருந்து துன்ப வாழ்வை அனுபவித்து வந்த ஒரு லட்சத்து 78 ஆயிரம் பொதுமக்கள் புலிகளின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டனர்.

இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க நேற்று இத்தகவலைத் தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற - அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் - ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இத்தகவலை வெளியிட்டார். அவர் மேலும் கூறியவையாவது:-

தொப்பிகலவைக் கைப்பற்றியதன் மூலம் படையினர் பெரும் வெற்றியைப் பெற்றுள்ளனர். தொப்பிகலவிலேயே புலிகளின் கிழக்குத் தலைமையக முகாம் இருந்தது.

கிழக்கில் உள்ள புலிகள் அனைவருக்கும் அங்குதான் பயிற்சிகள் வழங்கப்பட்டன. அங்கு பெரிய வைத்தியசாலை ஒன்றும் இருந்தது. காயமடைந்த புலிகள் அங்கு சேர்க்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டனர்.

இருபது வருட கால யுத்த வரலாற்றில் கிழக்கில் அவ்வவ்போது புலிகளின் சில இடங்கள் கைப்பற்றப்பட்ட போதிலும் தொப்பிகல கைப்பற்றப்படவேயில்லை.

இப்போது எம்மால் தொப்பிகலவைக் கைப்பற்ற முடிந்துள்ளது. இது கிழக்கில் நாம் பெற்ற பெரும் வெற்றியாகும். தொப்பிகல வெற்றி இலகுவாக மதிப்பிடக்கூடிய ஒன்றல்ல.

கிழக்கில் 60 வீதமான பகுதிகள் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தன. ஒருலட்சத்து 78 ஆயிரம் மக்கள் அவர்களின் கட்டுப்பாட்டில் இருந்து பல துன்பங்களை அனுபவித்து வந்தனர்.

இப்போது அந்த மக்களுக்கு விடுதலை கிடைத்துள்ளது. புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகள் அரசின் கீழ் கொண்டுவரப்பட்டன. மக்களும் அரச கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ளனர்.

புலிகளை நாம் கிழக்கில் இருந்து முற்றாக விரட்டினாலும் கூட அவர்களின் கெரில்லாத்தாக்குதல் தொடரும் என்பதை நாம் ஏற்றுக்கொள்கிறோம். இருந்தும் அத்தாக்குதல்களை முறியடிப்பதற்கான திட்டங்கள் எம்மிடம் உள்ளன.

இந்த விடயத்தில மக்கள் மிகவும் விழிப்புடன் இருந்து எமக்குத் தகவல்கள் வழங்க வேண்டும். கடந்த காலங்களில் பொது மக்கள் எமக்கு வழங்கிய தகவல்கள் மூலம் தான் புலிகள் மேற்கொள்ளவிருந்த பல தாக்குதல்களை எம்மால் இலகுவாக முறியடிக்க முடிந்தது. நாடு முழுவதிலும் உள்ள மக்கள் மிகவும் விழிப்பாக இருந்து, படையினருக்கு தகவல்களை வழங்கி, பயங்கரவாதத்தை ஒழிக்க உதவ வேண்டும் - என்றார் அவர். (சி)

## முன்பள்ளியின் கட்டடத் திறப்பு விழா

நீர்வேலி கலை ஒளி முன்பள்ளியின் கட்டடத் திறப்பு விழா இன்று வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு இடம்பெறவுள்ளது.

சனசமூக நிலையத்தின் உப செயலாளர் இ.இராஜரூபன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராக கோப்பாய் பிரதேச செயலர் சி.எ.மோகன் றாஸிம் சிறப்பு விருந்தினர்களாக ஐ.ஓ.எம். உயர் அதிகாரி ஏ.அருள்ஞானம், புத்தூர் பிரதேச சபைச் செயலாளர் த.நடராசா, முன்பள்ளி கல்வி அபிவிருத்திப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் த.பஞ்சலிங்கம் ஆகியோரும் கலந்துகொள்வர். (203)

## கண்ணீர் அஞ்சலி

### செல்வி யோ. ஜெனற் மரியசாந்தி

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக நாளை (14.07.2007) சனிக்கிழமை அருள் ஆச்சிரமத்தில் காலை 6 மணிக்குத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

(62677) நண்பர்கள்.

# தொப்பிகலவைக் கைப்பற்றுவதை விட தக்கவைத்திருப்பது செலவான விடயம்

## முன்னாள் விமானப் படைத் தளபதி கருத்து

கொழும்பு, ஜூலை 13

அரச படைகள் தொப்பிகலவைக் கைப்பற்றியமை முக்கிய அம்சம்தான். ஆனால் அதைக் கைப்பற்றுவதை விட தொடர்ந்து தக்கவைப்பதுதான் முக்கியமானது; இழப்பும் செலவும் ஏற்படுத்தக் கூடிய விடயம் இது.

முன்னாள் விமானப்படைத் தளபதியும், தற்போதைய விமானப் படைத் தளபதியின் தந்தையுமான ஹரி குணதிலக இவ்வாறு கருத்துக் கூறியிருக்கின்றார் என இணையத்தளச் செய்திகள் தெரிவித்தன.

தொப்பிகல சமரை வெல்வதற்கு ஆயிரம் அல்லது இரண்டாயிரம் துருப்பினர் போது மானவர்களாக இருக்கக்கூடும். ஆனால் அந்தப் பகுதியைத் தொடர்ந்து தக்கவைப்பது செலவானது. அதற்குப் பத்தாயிரம் முதல் இருபதாயிரம் வரையான படையி னர் தேவைப்படலாம்.

அரசு ஐம்பதாயிரம் துருப்பு களை மேலதிகமாகச் சேர்க்கவி ருக்கின்றது எனச் செய்திகள் வெளியாகியுள்ளன. அப்படிச் சேர்ப்பதானால் அவர்களுக்கு சம்பளமாக மட்டும் ஆண்டுதோறும் 720 கோடி ரூபா செலுத்தவேண்டி நேரும். அத னால்தான் பெரும் எண்ணிக்கையான - பல் லாயிரக்கணக்கான - துருப்புகளை பரவி நிலைநிறுத்தி, தொப்பிகலவைத் தொடர்ந்து தக்கவைத்திருப்பதாயின் அது மிகவும் செல வான விடயமாக இருக்கும் என்று குறிப்பிட்டேன்.

- இவ்வாறு அவர் மேலும் கூறினார் என அந்த இணையத்தளச் செய்தியில் தெரிவிக்கப்பட்டது. (சி)

## துயர் பகிர்கின்றோம்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 28 . 01 . 1971 |  | 08 . 07 . 2007 |

### அமரர் அந்தோனி கிறிஸ்தோத்திரம் கிருபாகரன்

(கிராம உத்தியோகத்தர் - யா/ 156, முள்ளானை, வலிகாமம் தென். மேற்கு பிரதேச செயலகம்)

மன்னார் மாவட்டத்தில் 1994.09.14இல் கிராம உத்தியோகத்தராக நியமனம் பெற்று யாழ்ப்பாண மாவட்டத்தில் யாழ்ப்பாண பிரதேச செயலகத்திற்கு மாற்றலாகி வந்து சேவையாற்றும் பொழுது தனது வாழ்க்கை துணைவியின் வதிவிடமான மாதகல் கிராமத்தை உள்ளடக்கிய வலிகாமம் தென். மேற்கு பிரதேச செயலகத்துக்கு தற்காலிக இடமாற்றம் பெற்று, முள்ளானை பிரிவுக்கு கிராம உத்தியோகத்தராகக் கடந்த 5 மாதங்கள் கடமையாற்றி மேலதிகாரிகள், சக உத்தியோகத்தர்கள், பிரிவு பொது மக்கள் ஆகியோரின் நட்பைப் பெற்றுக்கொண்டவர்.

மின்சாரம் தாக்கி அகால மரணமடைந்த கிருபாகரனின் இழப்பு அன்னாரின் குடும்பத்துக்கு மட்டுமல்ல சக கிராம உத்தியோகத்தர்களுக்கும் கூட ஏற்பட்டுள்ளது.

அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் குடும்பத்தவர்களுக்கு ஆத்ம பலத்தையும் கொடுக்க இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கிராம உத்தியோகத்தர்கள்,
வலிகாமம் தென்மேற்கு பிரதேச செயலகம்.
(62673)

## நவோதயா வார நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஜூலை 13

மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலையில் நவோதயா வார ஏழாம் நாள் நிகழ்வாக ஆச்கவெளிப்பாட்டு தினம் இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு கல்லூரி அழகரட்ணம் மண்டபத்தில் கொண்டாடப்படவுள்ளது.

பாடசாலை அதிபர் திருமதி வே. சண்முகரத்தினம் தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் சி. சண் முகநாதன் தம்பதியினர் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வர்.

ஆசியுரைகள், சின்னம் சூட்டும் நிகழ்வு, கண்காட்சி என்பன இதையொட்டி இடம்பெறவுள்ளன. (அ-1)

விண்ணப்பப்படிவம்
வடக்கு மாகாண பொதுச் சேவையின் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான விண்ணப்பப்படிவம் வர்த்தமானியுடன் சில்லறை
விலை - 10/-
ஏஞானம்ஸ் பிறின்டர்ஸ்
237, கந்தர்மடச் சந்தி,
யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்

### திருமதி சங்கரப்பிள்ளை பொன்னாத்தை



நாவற்குழியை பிறப்பிடமாகவும் கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளை பொன்னாத்தை நேற்று (12.07.2007) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் சங்கரப்பிள்ளையின் அன்பு மனைவியும் பரமேஸ்வரியின் (நாவற்குழி) அன்புத் தாயும் மரியஞானசீலனின் (மிருசுவில் - முன்னாள் தொலைத்தொடர்பு ஊழியர்) மாமியும் சுதர்சன் (யாழ். நாவற்குழி மகாவித்தியாலய ஆசிரியர்), சுதரட்சன் (ஹலோரஸ்ட்) சுதயூட்சன் (2ஆம் வருட நுண்கலைப்பீடம் யாழ். பல்கலை.) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.07.2007) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் கட்டை ஆலடி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இந்து மகா வித்தியாலய வீதி,
ஸ்ரேசன் றோட், கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

தகவல்:
கணவர், பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள்.

## தவறிவிட்டது

116, வேம்படிவீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியைச் சேர்ந்த மாரிமுத்து இராசையா என்பவரது தேசிய அ.அட்டை (380401410V), விசேட அ.அட்டை (0901000813) என்பன 09.07.2007 அன்று சப்பல் வீதிக்கும் வேம்படி வீதிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும். தொ.பே. 222 8235.

பதிவு செய்து விட்டீர்களா?
ஆங்கிலத்தில் பேசும் உங்கள் கனவை நனவாக்கும்
Master of English - V.C.D.
சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள்.
பாடசாலை மாணவர்களுக்கு 20 வீதம் விசேட விலைக்கழிவு.
முற்பதிவுகளுக்கு முந்துங்கள்...
PMC
443, ஸ்ரான்லி வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம்.
(62666)

## மரண அறிவித்தல்கள்

### செல்லத்தம்பி சிவநேசன்

(முன்னாள் இலங்கை வங்கி ஊழியர், மன்னார்க்கிளை)

நாரந்தனையைப் பிறப்பிடமாகவும் மன்னாரை வதிவிடமாகவும் கொண்ட செல்லத்தம்பி சிவநேசன் நேற்று (12.07.2007) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் செல்லத்தம்பி - நாகேஸ்வரி தம்பதியரின் அருமை மகனும், திருமதி மரினாவின் (இலங்கை வங்கி ஐந்தாம் மாநகரக்கிளை, கொழும்பு) அன்புக் கணவரும் கீர்த்தனன், நர்த்தனா ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

55/2, 5 ஆம் ஒழுங்கை, சென்ற் பெனடிக்ற் மாவத்தை,
கொழும்பு - 13.
தொ.பே. 065 2246187, 023 2250663 (62676)

தகவல்:
திருமதி மரினா சிவநேசன்
(மனைவி)

### திருமதி சித்திவிநாயகம் செல்வராணி



அல்வாய் வடக்கு, குரும்பிளாவத்தையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சித்திவிநாயகம் செல்வராணி 10.07.2007 செவ்வாய்க்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.07.2007) சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தக னக்கிரியைக்காக சுப்பர் மடம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குரும்பிளாவத்தை,
அல்வாய் வடக்கு, அல்வாய்.

தகவல்:
அ. அகிலன் (மருமகன் - சமுர்த்தி உத்தியோகத்தர், கரவெட்டி பிரதேச செயலகம்).
(சி/ 52904)

### கார்த்திகேசு கந்தையாபிள்ளை (பபா)



நயினாதீவு, 2ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு கந்தையாபிள்ளை நேற்று (12.07.2007) புதன்கிழமை ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - இலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான செல்வரட்ணம் - சிவராஜமலர் தம்பதியரின் மருமகனும் ஜீவவதனியின் பாசமிகு கணவரும் லக்ஷாயினி, கார்திகாயினி, கிருசாந்தி, ஷாயி, லாவன்யா ஆகியோரின் அன்புத் தந்தையும் லமேசனின் அன்பு மாமனும் லெபின், லதுஷா ஆகியோரின் அன்புப் பேரனும் சாயுச்சியநாதன், சாயுச்சியாம்பாள், சந்திரகாந்தா, சந்திரபாலன், தயாபரி, சறோஜினி (தாதிய உத்தியோகத்தர், யாழ். போதனாவைத்தியசாலை) ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஜீவபாலன், ஜெயபாலன், உதயபாலன், வாசுகி, தேவகி, காலஞ்சென்ற ஈஸ்வரபாலன் மற்றும் சிவபாலன், நந்தபாலன், ஜமுனா ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 16.07.2007 திங்கட்கிழமை ஜேர்மனியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

16/12, புகையிரத நிலைய வீதி,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.
0777 250978
ஜேர்மனி : 0049230 472 793

தகவல்:
திருமதி சறோஜினி - சுந்தரலிங்கம் (சின்னமணி)
செ. நந்தபாலன்
(தபால் ஊழியர், பிரதம தபாலகம்
யாழ்ப்பாணம்).
(62667)

### ஆனந்தராசா நீல்பிரசாந்த்



சுன்னாகம் பழைய பொலிஸ்நிலைய வீதியைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும்கொண்ட ஆனந்தராசா நீல்பிரசாந்த் (08.07.2007) ஞாயிற்றுக்கிழமை லண்டனில் அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆனந்தராசா - ரேணுகாகுமாரி தம்பதியரின் புதல்வனும் பொன்னம்பலம், தவமணி, செல்லச்சாமி, பூமணிஆகியோரின் பாசமிபேரனும், தவனேஸ்வரன், கிருஷ்ணகுமாரி, சசிகுமார், மோகனகுமாரி ஆகியோரின் பெறாமகனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.07.2007) வெள்ளிக்கிழமை லண்டனில் நடைபெறும். அவரின் சுன்னாகம் இல்லத்தில் துக்கம் அனுஷ்டிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பழைய பொலிஸ் நிலைய வீதி,
சுன்னாகம் தெற்கு, சுன்னாகம். (62675)

தகவல்:
த.கிருஷ்ணகுமாரி.
(பெரியதாய்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டின் பல பகுதிகளிலும் படையினர் சுற்றிவளைப்புத் தேடுதல்

யாழ்ப்பாணம்,ஜூலை 13

குடாநாட்டின் பல பகுதிகளிலும் நேற்று முன்தினம் படையினரும் பொலிஸாரும் இணைந்து தேடுதல்களை மேற்கொண்டனர்.

யாழ்.நகரப் பகுதியில் குருநகர் ஐந்து மாடிக் குடியிருப்புப் பகுதி, யாழ்.மத்தியூஸ் வீதி குடியிருப்புப் பகுதி, பாஷையூர் குடியிருப்புப் பகுதி, ஈச்சமோட் டைப் பகுதி என்பன படையினரால் சுற்றி வளைக்கப்பட்டன.

சென்பற்றிக்ஸ் வீதி, மத்தியூஸ் வீதி, திருநகர்ப் பகுதி ஆகியவைகளில் காலை கவச வாகனங்கள் சகிதம் வந்த படையினர் இக் குடியிருப்புப் பகுதிக்குள் வெளியார் எவரையும் உள்நுழைய அனுமதிக்கவில்லை.

இதேநேரத்தில் குடியிருப்புப் பகுதிகளிலிருந்து எவரையும் வெளிச்செல்லவும் அனுமதிக்கவில்லை. இவ்வீதியூடாகச் சென்ற பயணிகள் அடையாள அட்டைகளை பரிசோதித்த பின்னர் பயணம் செய்ய அனுமதிக்கப்பட்டனர்.

இக்குடியிருப்புப் பகுதிக்குச் சென்ற படையினர் குடியிருப்பாளர்களின் அடையாள அட்டைகளை வாங்கியபின் கொழும்புத்துறை இராணுவ முகாமிற்கு வந்து அவற்றைப் பெற்றுச் செல்லுமாறு தெரிவித்தனர். பொதுமக்கள் அங்கு சென்றதனால் அந்தப் பகுதி நேற்றுமுன்தினம் நண்பகல் வரை மக்கள் நடமாட்டமின்றி வெறிச்சோடிக் காணப்பட்டது.

நாவாந்துறைப் பகுதியும் காலையில் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல்கள் நடத்தப்பட்டன.

இதேவேளை -

மருதனார்மடம் மற்றும் இணுவில் கிழக்குப் பகுதிகள் இராணுவத்தினரின் சுற்றிவளைப்புத் தேடுதலுக்கு உட்படுத்தப்பட்டது.

காலை முதல் வீடு வீடாகச் சென்று தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்ட போதும் யாரும் கைது செய்யப்பட்டதாக தெரியவரவில்லை.

சுற்றிவளைப்புத் தேடுதல்கள் இடம்பெற்ற போதிலும் வீதிகளில் பயணம் மேற்கொண்டவர்கள் அடையாள அட்டைகளைக் காட்டிவிட்டு பயணத்தை மேற்கொள்ளக் கூடியதாக இருந்தது.

(அ-1-51-68)

# தற்காலிக இணைப்புக் கோரும் ஆசிரியர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்குக் கூட்டம்

**கல்வியமைச்சர் நடவடிக்கை**

யாழ்ப்பாணம்,ஜூலை13

யாழ்ப்பாணத்தில் தற்காலிக இணைப்புக் கோரியுள்ள வெளிமாவட்டப் பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான கூட்டம் ஒன்று விரைவில் கல்விமைச்சில் நடைபெறவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளைத் தான் மேற்கொள்வதாகக் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்திடம் உறுதியளித்துள்ளார்.

வெளிமாவட்டப் பாடசாலைகளில் பணிபுரியும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கு இங்குள்ள பாடசாலைகளில் தற்காலிக இணைப்பு வழங்கப்பட்டு சம்பளம் வழங்கப்பட்டது. எனினும் அவ்வாறு சம்பளம் வழங்குவது ஏப்ரல் மாதத்துடன் நிறுத்தப்பட்டது.

கடந்த ஒன்பது மாதங்களாக இவர்களுக்கான சம்பளம் யாழ். வலயக் கல்வி அலுவலகத்தால் வழங்கப்பட்டது.

வடமாகாண ஆளுநரின் உத்தரவுப்படி பிரஸ்தாப இணைப்புச் செய்யப்பட்ட ஆசிரியர்கள் மன்னார் மற்றும் வவுனியா மாவட்டப் பாடசாலைகளில் இணைக்கப்பட வேண்டும் எனக் கூறப்பட்டிருந்தது. ஆயினும் அவர்கள் அங்கு கடமைக்குச் செல்லாமையால் அவர்களது சம்பளம் ஏப்ரல் மாதத்துடன் நிறுத்தப்பட்டது.

இது விடயம் தொடர்பாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் த.மகாசிவம் கல்வியமைச்சரின் கவனத்துக்குக் கொண்டுவந்தார்.

இதனையடுத்து இது தொடர்பாக ஆராய்வதற்கான கூட்டம் ஒன்றை வடமாகாண ஆளுநர், கல்வியமைச்சின் செயலாளர் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர், ஆகியோரை உள்ளடக்கி கூட்டுவதற்கு கல்வி அமைச்சர் உறுதியளித்துள்ளார். (அ-50)

# போக்குவரத்துச் சபையின் யாழ். சாலையில் 26 பஸ் வண்டிகள் முடங்கிக் கிடக்கின்றன

## உதிரிப்பாகங்கள் இன்மையே காரணமாம்

யாழ்ப்பாணம்,ஜூலை 13

இலங்கை போக்குவரத்துச் சபையின் 26 பஸ்வண்டிகள் யாழ்ப்பாணத்தில் சேவைகளை மேற்கொள்ள முடியாமல் கோண்டாவில் சாலையில் முடங்கிக் கிடக்கின்றன.

குறிப்பிட்ட பஸ் வண்டிகளுக்குத் தேவையான உதிரிப்பாகங்கள் கொழும்பில் இருந்து எடுத்துவரப்பட்டமையால் இந்த பஸ் வண்டிகளை சேவையில் ஈடுபடுத்த முடியாத நிலைமை காணப்படுவதாக இலங்கை போக்குவரத்துச் சபையின் பொறுப்பதிகாரிகளில் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் யாழ்ப்பாணத்தின் சில பாதைகளில் பஸ் சேவைகள் இடம்பெறுவதில்லை.

குறிப்பாக பின்தங்கிய பகுதிகளான ஏழாலை, மயிலங்காடு, தீவகம் போன்ற பகுதிகளில் இத்தகைய நிலைமைகள் காணப்படுகின்றன.

சில பாதைகளில் பேதியளவு பஸ்கள் சேவையில் ஈடுபடுவதில்லை என்பதும் சுட்டிக்காட்டத்தக்காகும்.

இந்நிலையில் சேவைகளை மேற்கொள்ள முடியாது முடங்கிப்போயுள்ள பஸ்களுக்கான உதிரிப்பாகங்களை எடுத்து வந்து அவற்றை திருத்தி அமைப்பதன் மூலம் மேற்கண்ட குறைபாடுகளை ஓரளவு தீர்க்க முடியும் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (203-68)



யாழ்.ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் நிறுவனத்தின் 20 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நிறுவனம் நடத்தி வரும் கண்காட்சியை செஞ்சிலுவைச் சங்க சர்வதேச குழுவின் யாழ். வதிவிடப் பிரதிநிதி வலரி ஒபேட் நாடாவை வெட்டித் திறந்துவைப்பதையும் காட்சிக்கு வைக்கப்பட்ட செயற்கை அவயவங்களில் ஒரு தொகுதியையும் படங்களில் காணலாம். (படங்கள் : லக்ஸ்மன்)

# இறப்பு, பிறப்பு பதிவுகள் தொடர்பான முன்னோடிச் சேவை

யாழ்ப்பாணம்,ஜூலை13

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் தென்மராட்சி பிரதேச மக்களுக்கென காலங்கடந்த பிறப்பு, இறப்பு, விவாகம் ஆகிய பதிவுகள் மேற்கொள்வது தொடர்பான முன்னோடிச் சேவையை நடத்தவுள்ளனர்.

நாளை சனிக்கிழமை சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் இச் சேவை நடத்தப்படவுள்ளது.

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தினால் கிராம அலுவலர் பிரிவு ரீதியாக பிறப்பு, இறப்பு, விவாகம், காணாமற்போனோர் பதிவுகள் தொடர்பான நடமாடும் சேவை விரைவில் நடத்தப்படவுள்ளது.

இந்த நடமாடும் சேவையில் கலந்து கொள்ளவுள்ள மக்களுக்குத் தேவையான ஆவணங்கள் பெற்றுக்கொடுப்பதற்காக லயன்ஸ் கழகத்தினர் முன்னோடிச் சேவையினை நடத்தவுள்ளதாக கழகச் செயலாளர் லயன் செ.சுப்பிரமணியம் அறிவித்துள்ளார்.

(203-207)

# மட்டுவிலில் அன்னாசிச் செய்கை வெற்றி

யாழ்ப்பாணம் ஜூலை13

மட்டுவில் வடக்குப் பகுதியில் விவசாயியொருவரால் மேற்கொள்ளப்பட்ட அன்னாசிப் பயிர்ச்செய்கை வெற்றியளித்துள்ளது.

தோட்ட நிலத்தில் பயிரிடப்பட்ட அன்னாசிகளில் பழம் அறுவடைக்குத் தயாராகியுள்ளது.

விரைவில் அன்னாசிப்பழம் சந்தைக்கு கொண்டு வரப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஏ-9 வீதி மூடப்பட்ட பின்னர் அன்னாசிப் பழத்திற்கு தட்டுப்பாடு நிலவி வருகின்றது. இந்நிலையில் இங்கு அன்னாசி உற்பத்தி வெற்றி அளித்துள்ளது.

தொடர்ந்து ஏனையோரும் இப்பயிர் உற்பத்தியை மேற்கொள்ளப்படும் இடத்தில் அவற்றை இறக்குமதி செய்யப்பட வேண்டிய நிலைமைக்கு செல்லத் தேவையில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (203-207)

**குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்**

# சுகாதார விழிப்புணர்வு நிகழ்வுகளை சேவாலங்கா நிறுவனம் நடத்திவருகிறது

யாழ்ப்பாணம்,ஜூலை13

பொதுமக்களிடையே பொதுச்சுகாதாரம் தொடர்பான விழிப்புணர்வையும் சமூகப் பாதுகாப்பையும் மேம்படுத்துவதற்கான வேலைத்திட்டங்களை சேவாலங்கா நிறுவனத்தின் உளநலப்பிரிவினர் பரவலாக நடைமுறைப்படுத்தி வருகின்றனர்.

உலக சுகாதார நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ். மாவட்டப் பிராந்திய சுகாதாரப் பணிமனையின் உதவியுடனும் இந்தச் செயற்றிட்டங்கள் இந்த மாத ஆரம்பத்தில் இருந்து தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாக அந்த நிறுவனத்தின் இணைப்பாளர் ஜி.சபேசன் தெரிவித்தார்.

'டெங்கு' காய்ச்சல் மற்றும் 'சிக்குன் குனியா' என்பன பரவாமல் தடுப்பதற்கான வழிமுறைகள் பற்றிய கருத்தரங்குகள் வைத்திய அதிகாரிகளின் உதவியுடன் கிராமிய மட்டங்களில் சமூக நலப் பிரிவு ஊழியர்களால் நடத்தப்பட்டு வருகின்றன.

வளர்ப்பு நாய்களைப் பாதுகாப்பாக வளர்ப்பதற்கும் விலங்கு விசர் நோயை இல்லாதொழிப்பதற்குமான வேலைத்திட்டம் சார்பான கலந்துரையாடல்களும் வழிகாட்டல் செயன்முறையும் யாழ்ப்பாணம், வடமராட்சி மற்றும் தென்மராட்சி பகுதிகளில் நடைமுறைப்படுத்தப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

அத்துடன், யாழ். மாவட்டத்தில் உள்ள குழந்தைகள், வளர்த்தவர்கள், கர்ப்பிணித் தாய்மாரிடையே பொதுவாகக் காணப்படும் புரதச் சத்து குறைபாடும் அதனை நிவர்த்தி செய்தலும் சம்பந்தமான வழிகாட்டல் கருத்தரங்குகளும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. (203-88)

# சமுர்த்தி 'சிப்தொற' புலமைப்பரிசில் பெற்ற 269 மாணவர்களுக்கு நாளை பரிசில்கள்

யாழ்ப்பாணம்,ஜூலை13

சமுர்த்தி 'சிப்தொற' புலமைப்பரிசில் பெற தெரிவுசெய்யப்பட்ட 269 மாணவர்களுக்கு நாளை முற்பகல் 10 மணிக்கு யாழ்.பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் வைத்து புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டுள்ளன.

சமுர்த்தி நலன்பெறும் வறுமைக்கோட்டின் கீழ் உள்ள இரண்டாம் நிலைக் கல்வியைப் பெறும் மாணவர்களுக்கே இது வழங்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ். அரச அதிபர் கே.கணேஷ் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

தெரிவான மாணவர்களின் விவரம் பிரதேச செயலக ரீதியாக வருமாறு:-

**கோப்பாய்**

எஸ்.றசிந்தா, ரி.திருக்குமரன், பி.அமலகாந், ஏ.துஷ்யந்தி, ஏ.ஸ்ரீசாந், கே.சிந்துஜா, எஸ்.நித்தியதாஸ், எஸ்.ஜெயதாரணி, வை.சகிதா, கே.சுபாஜினி எஸ்.ஜெனார்த்தனி, கே.நிருசன், எஸ்.துவாரகன், கே.துவாரகன், வை.யோதீப், எஸ்.தர்மினி, ரி.சுஜந்தா, என்.ஜமுனா, கே.தர்சன், எஸ்.ஜீவிதவாசன்.

**நெடுந்தீவு**

பி.வனஜா, பி.உதயதர்சினி, ஏ.கிருஷ்ணரூபி, பி.தனுஜா, ரி.சுயந்தினி, கே.திபாசினி, எஸ்.சகாயதோமஸ், எஸ்.கிருஷ்டபிஜோலா, எம்.விமலராஜ், ஆர்.கலைவதனி, எம்.அமலயஸ்ரின், கே.குகப்பிரியா.

**சண்டிலிப்பாய்**

வை.ஆன்சாமினி, எஸ்.நிரோஜனா, ஆர்.நிஷா, என்.இனிதா, எஸ்.கம்சா, எஸ்.பிரதீபா, ஆர்.கஜாநந்தன், ஆர்.ஆன் றோசறியா, எஸ்.சறோஜா, எஸ்.கௌசிகன்.

ஆர்.மயூரி, வி.இமாஜினி, பி.நிறோஜினி, ரி.தர்சன், எஸ்.சர்மிளா, எம்.சிந்துஜா, வை.தர்சிகா, பி.அர்ஜினி, எஸ்.சுலோஜினி, பி.சுகன்ஜா.

**வேலணை**

வி.விஸ்மதா, கே.ஜலுக்சனா, வி.தர்சிகா, ஏ.கீர்த்தனன், எஸ்.நிஷாந்தன், ரி.சிந்துஜா, என்.பிரியலக்ஷன், என்.மைதிலி, ரி.விஜயகாந், எஸ்.குமணநாத்.

எஸ்.குணாளினி, பி.றேகா, ஏ.பிரணவசொரூபி, வை.மொறின் டேசான், கே.கஜானா, ஏ.சாளினி, எஸ்.சுகிர்தா, வி.காந்தரூபன், எஸ். சுஜீவா, எம்.கினிதா.

**காரைநகர்**

ரீ.கேதீசன், [illegible], ஏ.கிருபாகரன், [illegible] சன், ஆர்.பிரியதர்சினி, எஸ்.கோகுலவாணி, பி.பிரியா, எஸ்.றஜிதா.

கே.செல்வலக்ஷ்மி, என்.தாரணி, கே.கிருபாகரன், கே.உஷாநந்தினி, எஸ்.அனுஷா, ஆர்.மோகனாம்பிகை, கே.ஹரிபாலன், பி.கஜேந்திரன், பி.பரிதா, ஏ.பிரதீபா.

**சங்கானை**

ரி.தவமலர், எம்.சலீனா, எஸ்.[illegible]ஜிந்தன், வை.றோகினி, பி.சுகிர்தா, வி.கஜேந்திரன், கே.மனோகரன், ஆர்.அஜந்தா, எஸ்.அனுஷா, ஏ.சோபிகா.

எஸ்.சுகிர்தா, ஏ.நிறோஜா, வை.அஜித்திரா, எஸ்.மதியழகி, எஸ்.நிதர்சன், எஸ். சர்வானந்தன், எஸ். சங்கீதா, வி.நிரோஜன், கே.விஜிதா, எஸ். கிருஷ்ணகரன்.

**ஊர்காவற்துறை**

வி.[illegible]வன்ராஜ், ஜே.சுயந்தினி, எல்.தனீஷ், பி.ஏ.மாட்டீன், ஏ.றமா, ஜே.நிஷாந்தினி, கே.றெமின்ரன், எஸ்.ரி.கொட்வின், எம்.முரளீஸ்வரன், எல்.தேவகௌரி.

வை.யோகானந், வி.லக்ஷன், ஏ.மரியயுஜினி, ஏ.நிராகரன், எஸ்.கஜீரன், எம்.லூடே[illegible]ந்தன். (தொடரும்)

(203)

# பாடசாலை மாணவருக்கு அடுத்த வாரம் முதல் உணவு

யாழ்ப்பாணம் ஜூன் 13

பாடசாலை மாணவர்களுக்கான காலை உணவு அடுத்த வாரம் தொடக்கம் விநியோகிக்கப்படவுள்ளது.

காலை உணவு விநியோகிப்பதற்குரிய உணவுப் பொருள்கள் இவ்வாரம் பாடசாலைகளுக்கு வழங்கப்படவுள்ளன.

உணவுக் களஞ்சியத்திற்கு பொருள்கள் பெற்றுக் கொள்வதற்குரிய வழங்கல் கட்டளைகள் யாழ். செயலகத்தினால் காலை உணவு விநியோகிக்கும் கோட்டக் கல்வி அலுவலகங்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(203-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**தம்பையா வல்லிபுரம்**
(பிரபல துவிச்சக்கர வண்டி திருத்துநர், உடுவில் மகளிர் கல்லூரி அருகில்)

மலர்வு 02-04-1943 | உதிர்வு 24-06-2006

திதி: 13.07.2007

இன்று (13.07.2007) வெள்ளிக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் முதலாம் ஆண்டு திவசக்கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்து கொண்டு அவரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

அம்பலவாணர் வீதி,
உடுவில். (62636) **குடும்பத்தினர்.**

## 20ஆம் ஆண்டு நினைவலைகள்

அன்னை மடியில் 26 ★ 03 ★ 1926



அநியாய அழிப்பில் 13 ★ 07 ★ 1987

**அமரர் வேலுப்பிள்ளை முருகேசு**
(ஓய்வுபெற்ற ஆசிரியர், யா/யார்க்கரு விநாயகர் வித்தியாலயம், கரவெட்டி)

எம்குல விளக்கு நீங்கள் அணைந்தபோது
நாம் கண் இழந்த குருடரானோம்
நீங்கள் எம் அகத்தில் ஏற்றிய
ஒளியாலேயே இன்றும் வாழ்கின்றோம்

என்றென்றும் உங்கள் நினைவுகளுடனே வாழும்:

இரட்டை வீடு, முதலி கோவில் வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

உங்கள் அன்பு மனைவி,
மகள், மருமகன், பேரப்பிள்ளைகள்.
(62502)

## கண்ணீர் அஞ்சலி

அன்னையின் மடியில் 05 - 08 - 1982



ஆண்டவன் பிடியில் 08 - 07 - 2007

அமரர் **ஜெனற் மரியசாந்தி ஜோன் அன்ரனி**
(யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி 5ஆம் அணி ஆங்கிலத்துறை ஆசிரிய மாணவி)

அழகிய புன்னகையால் எல்லோரையும் கவர்ந்தவளே
மூன்றாண்டுகள் எம்மோடு சேர்ந்து கல்லூரிப்படிப்பை
வெற்றியுடன் நிறைவாக்கினாய்
நேர்முகப் பரீட்சையையும் முடித்துவிட்டு
ஆசிரியப் பணிக்காய் ஆவலுடன் காத்திருந்த உன்னை
காலன் வந்து கவர்ந்து விட்டான்

வற்றாத விழிகளுடன் உன் நினைவுகள்
வையகம் உள்ளவரை என்றும் நிலைத்திருக்கும்
ஈரவிழிகளுடன் இருகரம் கூப்புகிறோம்
இறைவனின் பாதத்தில் சாந்தி கொள்வீர் - நித்தியமாய்.

உமது பிரிவால் துயருறும்
**5 ஆம் அணி ஆசிரியமாணவர்கள்**
**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.**
(62664)

## மரண அறிவித்தல்

### இரத்தினம் அருளையா



கொக்குவிலைப் பிறப்பிடமாகவும், மாங்கொல்லை காங்கேசன்துறையை வசிப்பிடமாகவும், தற்காலிகமாக தாவடி தெற்கு, கொக்குவிலில் வசிப்பவருமாகிய இரத்தினம் அருளையா (2007.07.11) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆச்சிமுத்துவின் கணவரும், கோபாலகிருஸ்ணன், (ஜேர்மனி), பவானந்தராஜா, (சின்னராசு - சுவிஸ்), அருந்தவராஜா (ஜேர்மனி), தவராஜா (லண்டன்), கேதீஸ்வரி (லண்டன்), நகுலேஸ்வரி (கனடா), செல்வரத்தினம் (கனடா), ஆகியோரின் பாசமிகு தந்தையும், பாமினி, ஜெயா, அருள் ஆகியோரின் மாமனும் சுஜேன், அஜித் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (2007.07.12) வியாழக்கிழமை நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**சின்னராசு (பவான்)**
T.P. 0041 522030235, 0793073665
**கோபாலகிருஷ்ணன்**
T.P. 0715182339

தகவல்:
**க.நவரத்தினம்,**
**தாவடி தெற்கு,**
**கொக்குவில்.**
(62652)

### கொட்டடிச் சந்தையில் மீன் விலை அதிகரிப்பு

கொட்டடி மீன் சந்தையில் மீனின் விலை திடீரென அதிகரித்துக் காணப்படுகின்றது.

தீவுப் பகுதியில் இருந்து வியாபாரிகளால் எடுத்துவரப்படும் மீன்களின் விலையே அதிகரித்துள்ளது. புங்குடுதீவில் ஒரு கிலோ மீன் 600 ரூபா வரை விற்கப்படுகின்றது.

இந்த விலை அதிகரிப்பே கொட்டடி மீன் சந்தையிலும் மீனின் விலை அதிகரிப்புக்கு காரணம் என்று தெரிவிக்கப்பட்டது.(203-224)

### உள்ளூராட்சி வார எழுச்சி விழா

யாழ்.மாநகர சபையின் நீர் வழங்கல் பகுதியினர் உள்ளூராட்சி வார எழுச்சி விழாவை இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடத்தவுள்ளனர்.

நீர்வழங்கல் பொறியியலாளர் வி.செ. சிவப்பிரகாசம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் மாநகர ஆணையாளர் மு.செ.சரவணபவ பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (203-111)

## விற்பனைக்கு

Honda Super Cup c 50 Self Start மோட்டார் சைக்கிள் (நீலம்) விற்பனைக்குண்டு
தொடர்பு: S.S **நாதன்**
இல. 16/3, விநாயகர் வீதி, ஈச்சமோட்டை, யாழ்.
T.P. 0776146434 (62660)

## விற்பனைக்கு

எம்மிடம் P4 கொம்பியூட்டர் (Canopus DVS Storm - 2 ) வீடியோ காட் பொருத்தியது மற்றும் Panasonic - DVX100 வீடியோ கமாரா, என்பவற்றுடன் Nickon fm-2 கமராக்கள் மற்றும் புகைப்படத் துறைசார் பொருள்கள் (பாவித்ததும் புதியதும்) விற்பனைக்குண்டு. விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். தொடர்பு:
**செல்வா மொடலிங் போட்டோ கிராஃபி**
பருத்தித்துறை வீதி, 3ம்கட்டை யாழ்ப்பாணம்
T.P. 0777112419, 0776042901 (62616)

## விற்பனைக்கு

எமது சங்கத்தில் பின்வரும் கோழி வளர்ப்பு உபகரணங்கள் விற்பனைக்குண்டு. தேவையானவர்கள் அலுவலக நேரத்தில் பொருள்களைப் பார்வையிட்டு கூறு விலையை 23.07.2007 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கவும்.

1) தீவனப்பாத்திரம் 3 கிலோ - 142
2) தீவனப்பாத்திரம் 5 கிலோ - 27
3) தண்ணீர்ப்பாத்திரம் 1 லீற்றர் - 21
4) தண்ணீர்ப்பாத்திரம் 5 லீற்றர் - 03
5) தண்ணீர்ப்பாத்திரம் பெரிது - 12
6) முட்டைத் தட்டு - 21
7) தானியங்கி நீர்ப்பாத்திரம் - 31
8) தானியங்கி சிறிஞ் - 02
9) 50 லீற்றர் வாளி பொருத்தக்கூடிய இரும்பு பிறைக்கற் - 06

பொது முகாமையாளர்,
**யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டறவுச் சங்கம் (வ-து)**
திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்.
(சு-52901)

## 122 ஆவது நாள் நினைவு தினமும் 71 ஆவது பிறந்ததினமும்



**ஐயம்பிள்ளை செல்லக்கிளி**

பிறந்ததினம் 13-07-1936 | பிரிந்ததினம் 14-03-2007

பெற்று வளர்த்துப் பறந்ததுவே
பாசக்கிளி
போற்றித் துதி செய்யச் சென்றதுவே
சோலைக்கிளி
ஏற்றிய தீபம் அணைந்ததுவே
வண்ணக்கிளியே
ஆற்றுவார் யாருமில்லை அழுகின்றோம்
செல்லக்கிளியே

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
[illegible]

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்துகள்

சற்கோட்டையை வசிப்பிடமாகக் கொண்ட **ஜெருசன்- சோபா** தம்பதியரின் செல்வப்புதல்வன்
**ஜெ.விதுசன்**

முதலாவது பிறந்தநாளை தனது இல்லத்தில் இன்று (13.07.2007) வெள்ளிக்கிழமை வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். இவரை சற்கோட்டையில் வசிக்கும் அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா நோர்வேயில் வசிக்கும் பெரியப்பா, பெரியம்மா, அண்ணா சற்கோட்டையில் வசிக்கும் சித்தப்பா, சித்தி பொலிகண்டியில் வசிக்கும் அம்மப்பா, அம்மம்மா, மாமா, சித்தி மற்றும் உற்றார், உறவினர்கள் பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் வாழ்க என வாழ்த்துகின்றனர்.







தகவல்:
பெரியப்பா குடும்பம் (ஜெகன்).
நோர்வே.
(62649)

## தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கம் மகோற்சவகால சிறப்புப் பொதுக் கூட்டம்

மேற்படி துர்க்காதேவி தேவஸ்தான மகோற்சவ காலப் பொதுக்கூட்டம் (15.07.2007) ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்குச் சங்கப் பணிமனையில் நடைபெறும்.

சகல அங்கத்தவர்களையும் தவறாது சமுகந் தரும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

**ம.விக்கினேஸ்வரன்.**
செயலாளர்
(62654)



முனீஸ்வரன் துணை

## யாழ்ப்பாணம் - கோட்டை ஸ்ரீ முனீஸ்வரன் தேவஸ்தானம்

### மணவாளக்கோல அலங்கார உற்சவ விஞ்ஞாபனம் - 2007

அடியார்களே!

எல்லாம் வல்ல இறைவன் திருவருளால் சர்வசித்து வருடம் ஆனி மாதம் 30ஆம் நாள் நாளை (14.07.2007) சனிக்கிழமை தொடக்கம் 07.08.2007 செவ்வாய்க்கிழமை வரை 25 நாள்கள் வருடாந்த அலங்கார உற்சவ விழா நடைபெறத் திருவருள் கூடியுள்ளது. இப்புண்ணிய காலத்தில் அடியார்கள் யாவரும் சமுகந் தந்து எம்பெருமானைத் தரிசித்து பேரானந்தப் பெருவாழ்வு பெற்றுய்யும் வண்ணம் வேண்டுகின்றோம்.

தினமும் முற்பகல் 10 மணிக்கு ஸ்நபன அபிஷேகமும் 12 மணிக்கு வசந்த மண்டபப் பூஜையையும் தொடர்ந்து சுவாமி வீதி வலம் வருவார்

25ஆம் நாள் (07.08.2007) செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு சங்காபிஷேகமும் 12 மணிக்கு விசேட பூஜையும் நடைபெறும். அதனைத் தொடர்ந்து அன்னதானம் நடைபெறும். பிற்பகல் 3 மணிக்கு வசந்த மண்டபப் பூஜையும் நடைபெற்று அதனைத் தொடர்ந்து ரகபவனி உற்சவம் நடைபெறும்.

(62633) **- கோட்டை ஸ்ரீ முனீஸ்வரன் தேவஸ்தானம்.**

## ஆடிச்செவ்வாய்க் கடை ஏலம்

தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கத்தினரால் துர்க்காதேவி தேவஸ்தான ஆடிச்செவ்வாயை முன்னிட்டு (15.07.2007) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் சங்கமுன்றலில் கடைகள் ஏலம் விடப்படும் என்பதனை அறியத்தருகின்றோம்.

**ம.விக்கினேஸ்வரன்**
செயலாளர்
(62655)

## OLD BOYS' ASSOCIATION
## ST. PATRICK'S COLLEGE JAFFNA
## ANNUAL GENERAL MEETING
## 15TH JULY - 2007

The Annual General meeting of the Old Boys' Association
St. Patrick's College Jaffna
will be held at 10.30 a.m on Sunday
the 15th July 2007
At the College Mathuram Square Hall.
Members of the Alumni are requested to be present.
The Agenda will be as given in the Notice already sent.
All members will join in a fellowship lunch
affter the meeting.

*S.Mariathas*
*General Secretary,*
*O.B.A. - S.P.C*
*Jaffna.*

**No.59, St Patrick's Road**
**Jaffna.**
(62657)

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
**கந்தையா இராசரெத்தினம்**
(மாமா)

தோற்றம் 05-06-1941 | மறைவு 13-07-2002



ஆண்டுகள் ஐந்து ஓடி மறைந்தாலும்
அகலாது உம் நினைவு எம்மைவிட்டு

*கோண்டாவில் மேற்கு,*
*கோண்டாவில்.*
(62644)
**மருமக்கள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிறவிப் பெருங்கடல்

ஒருவன் ஆயிரம் பவுண்களைச் சேர்த்து வைத்திருந்தான். அழகிய இளம் மனைவி, ஐந்து வயதுப் பாலகன் இவர்களுடன் இனிது வாழ்ந்தான். மழை பொழிந்து வெள்ளம் வந்து அவன் வாழ்ந்த ஊரே வெள்ளத்தில் மூழ்கிவிட்டது. அவன் பவுண் மூடையைத் தலையிலும் மனைவியை இடது தோளிலும் மகனை வலது தோளிலும் சுமந்துகொண்டு வெள்ளத்தில் நீந்தலானான்.

மேலும் வெள்ளம் வந்துவிட்டது. மூன்று சுமைகளும் அனை அழுத்தின. ஏதாவது ஒன்றை விட்டால் சுமை குறையும். நீந்தி அக்கரை சேரலாம் என்ற அக்கறை வந்தது. பொன் மூடையை விட்டான். சிறிது கனம் குறைந்து நீந்திவிட்டான்.

ஞானக்கதிர்

மேலும் வெள்ளம் வந்துவிட்டது. இப்போதுஇன்னும் ஒன்றைவிட்டாலன்றி நீந்த முடியாது என எண்ணினான். மனைவியை விடுவதா? மகனை விடுவதா? என்று சிந்தித்தான். மனைவியைத் தன் விருப்பத்தால் மணந்து கொள்ளலாம். குழந்தை தெய்வங் கொடுத்தாலன்றிக் கிடைக்காது. ஆதலால் மனைவியை விட்டு விட்டான். சுமை நீங்கிக் கரை சேர்ந்தான்.

வெள்ளம் என்பது பிறவிப் பெருங்கடல். பொன்னாசை, மனைவியாசை, மக்களாசை என்ற மூவாசையும் ஒன்றொன்றாக விட்டபின் முத்திக்கரை சேர்ந்தான். அநுபூதிக்கு ஆசைகள் தடை. ஆதலால், ஆசைகளைவிட்டு முருகன் அநுபூதியைப் பெறவேண்டும்.

நன்றி:ஞானச்சுடர்

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,ஜூலை 13

அளவெட்டி குருக்கள் கிணற்றடி விநாயகர் ஆலய பெருந்திருவிழா எதிர்வரும் 20 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 28 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும். (203)

* * *

யாழ்ப்பாணம்,ஜூலை13

தெல்லிப்பழைக்கு குருநாதசுவாமி ஆலய அலங்காரத்திருவிழா கடந்த 3 ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

நாளை சனிக்கிழமை காலை அபிஷேகம், பூசை, ஊஞ்சல் என்பன இடம்பெற்று தீர்த்தத்துடன் திருவிழா நிறைவடையும். (203)

* * *

நவாலி,ஜூலை13

ஆனைக்கோட்டை ஆலடி ஞானவைரவர் ஆலய அலங்கார திருவிழா நாளைமறுதினம் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 10 தினங்கள் இடம்பெறும் இத்திருவிழாவில் காலை முதல் மாலை வரை விசேட பூசையும் அபிஷேக ஆராதனைகளும் இடம்பெறும். (203-100)

யாழ்ப்பாணம்,ஜூலை13

ஈச்சமோட்டை கலட்டிப் புலம் ஞான வைரவர் ஆலய அலங்காரத் திருவிழாவின் இறுதிநாளான நாளை சனிக்கிழமை வைரவப் பெருமான் திருமஞ்சத்தில் வீதி வலம் வருவார் மறுநாள் பிராயச் சித்த அபிஷேகமும் மகேஸ்வர பூசையும் இடம்பெறும். (224)

* * *

குருநகர்,ஜூலை13

குருநகர் கார்மேல் அன்னை ஆலயத் திருவிழாத்திருப்பலி எதிர்வரும் 16 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 6.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்த ஆலயத்தின் திருவிழாவுக்கான ஆயத்த வழிபாடுகள் கடந்த 9 ஆம் திகதி திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நாளாந்த வழிபாடுகள் தினமும் மாலை நேரங்களில் நடைபெற்று வருகின் றது.

நாளை மறுதினம் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 3.30 மணிக்கு நற்கருணை நாதர் வழிபாடும் மறுநாள் திங்கட்கிழமை திருவிழாத்திருப்பலியும் நடைபெறும். அன்று மாலை 3.30 மணிக்கு அன்னையின் திருச்சொரூப பவனி நடைபெற்று விழா நிறைவடையும். (203-51)

# இந்திய ஜனாதிபதி கலாமுக்கு இங்கிலாந்தின் உயர் விருது



லண்டன், ஜூலை13

இந்திய ஜனாதிபதி அப்துல் கலாம், இங்கிலாந்தின் மிக உயர்ந்த 'இரண்டாவது சாள்ஸ் அரசர் விருதுக்கு' தேர்தெடுக்கப்பட்டுள்ளார்.

இந்தியாவில், ஆக்கபூர்வமான விஞ்ஞான வளர்ச்சிக்கு வித்திட்டதற்காக அவருக்கு இந்த விருது வழங்கப்படுகிறது.

ஜப்பான் பேரரசர் அகிஹிட்டோவுக்கு அடுத்த படியாக இந்த விருதைப் பெறும் ஒருநாட்டின் தலைவர் என்ற பெருமையையும் பெறுகிறார் கலாம்.

இங்கிலாந்து அரச பரம்பரைத் தலைவர் மார்ட்டின் ரீஸ் கூறுகையில் வளரும் நாடான இந்தியாவை வளர்ச்சியடைந்த நாடாக மாற்றுவதற்கு தொலைநோக்குத் திட்டம் தீட்டியவர் கலாம் என்று புகழாரம் சூட்டினார்.

இன்று வெள்ளிக்கிழமை டில்லி மற்றும் லண்டனில் நடைபெறுவதாக இருந்த விருது விழா முன்னாள் பிரதமர் சந்திரசேகரின் மறைவையடுத்து ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

ஜூலை 19 இந்திய ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின், விருது வழங்குவதற்கான புதிய திகதி அறிவிக்கப்படவுள்ளது. (50)

# சிட்னியில் கைதான ஈழத் தமிழர் புலிகளின் தலைவரைச் சந்தித்தவராம்

மெல்பேர்ன்,ஜூலை13

ஆஸ்திரேலியாவில் கைதுசெய்யப்பட்டுள்ள 40 வயதான ஆறுமுகம் ரஜீவன், தடைவிதிக்கப்பட்டுள்ள தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை 2003ஆம் ஆண்டு சந்தித்துள்ளார் என மெல்பேர்ன் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

ஆறுமுகம் ரஜீவன், நியூ சௌத்வேல்ஸில் செவ்வாய்க்கிழமை கைதுசெய்யப்பட்டார். இவர்மீது மூன்று குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன. இவர் மெல்பேர்ன் நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை ஆஜர் படுத்தப்பட்டார்.

தடை செய்யப்பட்டுள்ள தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை 2003 ஆம் ஆண்டு ஆறுமுகம் ரஜீவன் சந்தித்துள்ளார் என வழக் குத் தொடுநர் மார்க்டீன் நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

மெல்பேர்னைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கும் தமிழ் இணைப்புக் குழுவுக்கு 600,000 அமெரிக்க டொலர்களைக் கொண்ட வங்கிக் கணக்குண்டு. ரஜீவன் இக்கணக்கைக் கையாள்வதற்காக கையொப்பம் இடுவதற்கான அதிகாரம் பெற்றவர் என்றும் அவர் விளக்கினார்.

இங்கு நிதி திரட்டப்பட்டு இலங்கையிலுள்ள தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. 2003 ஆம் ஆண்டு ஒக்டோபரில் ஆறுமுகம் ரஜீவன் இலங்கை சென்று தமிழீழ விடுதலைப் புலிகளின் "தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனைச் சந்தித்துள்ளார்'' என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

ரஜீவன் பிணைகோரி விண்ணப்பிக்கவில்லை. எனினும் அவரது சட்டத்தரணி சாம் ஜோர்ட்டன் அடுத்தவாரம் விண்ணப்பிக்கக் கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. நீதிவான் ஜெரார்ட்லெத்பிரிஜ் வழக்கு விசாரணையை அடுத்த ஒகஸ்ட் 23 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

பயங்கரவாத இயக்கமொன்றில் அங்கத்துவம் வகித்தல், பயங்கரவாத அமைப்பொன்றுக்கு ஆதரவு அல்லது ஆதாரங்கள் அளித்தல், தடைப்படுத்தப்பட்ட இயக்கமொன்றுக்கு நிதி திரட்டல் ஆகிய மூன்று குற்றச்சாட்டுகளே இவர்மீது சுமத்தப்பட்டுள்ளன.

இத்தகைய குற்றச்சாட்டுகளின் பேரில் ஏற்கனவே அரூரன் விநாயகமூர்த்தி (வயது - 32), சிவராஜா யாதவன் (வயது - 36) ஆகியோரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். 2007 ஆம் வருட மே 8 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்ட இவ்விருவருக்கும் நீதிமன்றத்தால் பிணை மறுக்கப்பட்டுவிட்டது. (சி)

# மாவைக் கந்தன் வருடாந்தத் திருவிழா அடுத்த வியாழக்கிழமை ஆரம்பம்

## வழமையான போக்குவரத்து ஏற்பாடுகள்

யாழ்ப்பாணம்,ஜூலை13

சரித்திரப் பிரசித்திபெற்ற மாவிட்டபுரம் அருள்மிகு ஸ்ரீ கந்தசுவாமி கோயில், சர்வசித்து வருட காம்யோற்சவம் எதிர்வரும் வியாழக்கிழமை - ஜூலை 19 ஆம் திகதி- ஆரம்பமாக உள்ளது.

இருபத்தைந்து நாள்கள் மேற்படி திருவிழா நடைபெறும். ஓகஸ்ட் 11ஆம் திகதி சனிக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத்த திருவிழாவும் ஆடி அமாவாசை கண்டகி தீர்தமும் நடைபெறும்.

25 நாள் விசேட திருவிழாக்கள் வருமாறு:

13.07.2007 (வெள்ளிக்கிழமை) க்ஷேத்திரபால ஆராதனை, 23.07.2007 (திங்கட்கிழமை) 5 ஆம் திருநாள் ஷண்முகப் பெருமான் திருநடனம், 30.07.2007 (திங்கட்கிழமை) 12ஆம் திருநாள் ஷண்முகார்ச்சனை, 06.08.2007 (திங்கட்கிழமை) 19ஆம் திருநாள் திருக்கார்த்திகை விழாவும் ஷண்முகார்ச்சனையும், 11.08.2007 (சனிக்கிழமை) 24ஆம் திருநாள் தேர்த்திருவிழா, 12.08.2007 (ஞாயிற்றுக்கிழமை) ஆடி அமாவாசை 13.08.2007 (திங்கட்கிழமை) கண்டகி தீர்த்தம்,14.08.2007 (செவ்வாய்க் கிழமை) க்ஷேத்திரபால ஆராதனா.

மாவைக் கந்தனது உற்சவங்கள் இருபத்தைந்து தினங்களாக இடம்பெறும் போது நாளாந்தம் ஸ்னபனாபிஷேகம், அலங்கார பூசைகள், ஆராதனைகள், பிரார்த்தனைகள், திருமுறை ஓதுதல், திருவீதி பவனி, மகேஸ்வர பூசை என்பன நிகழும். அருணகிரிநாத சுவாமிகளின் திருப்புகழ் கானாமிர்தங்களோடு ஷண்முகார்ச்சனைகளும் நடை பெறும்.

* இதேவேளை- திருவிழாக்கள் யாவும் தினமும் காலை 8 மணிக்கு ஆரம்பமாகி மாலை 4 மணி வரை நிகழும்.

* இலங்கை போக்குவரத்துச் சபை வழமைபோல் அடியார்களது வசதிகளை முன்னிட்டு தெல்லிப்பழை சோதனை நிலையத்திலிருந்து மாவிட்டபுரம் கோவில் வரை பஸ் சேவைகள் நடத்த ஏற்பாடாகியுள்ளது.

* பரிசுத்தமான அர்ச்சனை, ஆராதனைப் பொருள்கள், மாவிளக்கேற்றுவதற்கான செந்திணை, தேன், சர்க்கரை, பசுநெய், நூற்திரி ஆகியவற்றையும் மலிவு விலையில் பெறுவதற்கான வசதிகள் ஆலய தெற்கு வீதியிலுள்ள விற்பனை நிலையங்களில் செய்யப்பட்டுள்ளன.

இந்த விவரங்களை மாவையாதீனத்தின் கர்த்தாவும் பிரதம குருவுமான மஹாராஜ ஸ்ரீ சு.து.சண்முகநாதக்குருக்கள் உதயனுக்குத் தெரிவித்தார். (அ)

# ஓகஸ்டில் ஆரம்பமாகும் உயர்தரப் பரீட்சைக்கு நாடளாவிய ரீதியில் 1771 பிரதான நிலையங்கள்

கொழும்பு, ஜூலை13

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 6 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஜி.சீ.ஈ.உயர்தரப்பரீட்சை நாடளாவிய ரீதியில் ஆயிரத்து 771 பிரதான நிலையங்களிலும் 277 இணைப்பு நிலையங்களிலும் நடைபெறவுள்ளன.

யாழ்ப்பாணத்தில் 73 நிலையங்களும், கிளிநொச்சியில் 10 நிலையங்களும் , முல்லைத்தீவில் 10 நிலையங்களும், மன்னாரில் 11 நிலையங்களும், வவுனியாவில் 15 நிலையங்களும், திருகோணமலையில் 21 நிலையங்களும் அமைக்கப்படவுள்ளன.

மட்டக்களப்பில் 37நிலை யங்களும் , கல்முனையில் 48 நிலையங்களும் அமைக்கப்படவுள்ளன.

இப் பரீட்சைக்கு பாடசாலை மட்டத்தில் இருந்து ஒரு லட்சத்து 89 ஆயிரத்து 164 பேர் தோற்றவுள்ளனர்.

வெளிவாரியாக 45 ஆயிரத்து 794 பேர் தோற்றவுள்ளனர் என பரீட்சை ஆணையாளர் நாயகம் அனுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

இப்பரீட்சை ஓகஸ்ட் 31ஆம் திகதி வரை நடைபெறும். (203)

# தீவக பிரதேச சிற்றூர்திகள் தரித்து நிற்பதற்கென யாழ்.பஸ் நிலையத்தில் இடம் ஒதுக்கவில்லை

## உரிமையாளர்கள் கவலை தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை13

தீவகம் வடக்கு - ஊர்காவற்றுறைப் பிரதேச சிற்றூர்திகளுக்கு யாழ். பஸ் நிலையத்தில் தரித்து நிற்பதற்கான இடம் எதுவும் ஒதுக்கப்படவில்லை என்று உரிமையாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

யாழ். பஸ் நிலையத்தில் இருந்து கச்சேரி போன்ற இடங்களுக்குச் செல்வதற்கு ஏனைய சிற்றூர்திகளுக்கு இடம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் தீவக சிற்றூர்திகளுக்கு இடம் ஒதுக்கப்படாமை கவலையளிப்பதாகக் கூறப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் யாழ். பஸ் நிலையம் முன்பாக முனியப்பர் ஒழுங்கையில் தீவக சிற்றூர்திகள் தரித்து விடப்பட்டு வந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

எனவே இதற்குரிய நடவடிக்கைகள் உரியவர்களால் மேற்கொள்ளப்படவேண்டும் என்று பாதிக்கப்பட்டவர்கள் கேட்டுள்ளனர். (203)

# காட்டுப்பகுதியை கைப்பற்றிவிட்டு வெற்றிவிழா கொண்டாடுவதா?

## சாடுகிறார் எதிர்க்கட்சித் தலைவர் ரணில்



''குடுமிமலை என்னும் காட்டுப் பகுதியைக் கைப்பற்றிவிட்டு அதற்காக ஒரு வெற்றி விழா நடத்துவதா? குடுமிமலை மரங்களை இனி வெட்டி விற்று இலாபம் சம்பாதிக்க குடுமிமலை மர நிறுவனம் தொடங்குவார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ''

-இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க சாடியுள்ளார்.

காலியில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் அவர்பேசும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மஹிந்தவின் சட்டத்தரணி எனக்கு அனுப்பிய கடிதத்தில் 200 கோடி ரூபாய் நஷ்டஈடு கோரியுள்ளார். என்மீது மஹிந்த பொய்க் குற்றச்சாட்டைச் சுமத்துகிறார். ஆனால், அவர் புலிகளுக்கு நிதி வழங்கியமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

மக்களிடம் இருந்து பெருமளவான பணத்தை அரசு கடத்தல் சம்பவங்கள் மூலம் அறவிட்டு வருகின்றது. ஊழல், தரகு மூலமாகவும் மக்கள் பணத்தை அரசு சுரண்டுகின்றது. இதனால் மக்கள் அவதிப்படுகின்றனர்.

இந்த நிலையில் குடுமிமலை வெற்றியை கொண்டாடி அங்குள்ள மரங்களை வெட்டிப் பணம் சம்பாதிக்க மஹிந்த சகோதர நிறுவனம் முயல்கின்றது. கோட்டாபய ஆயுதங்களைக் கொள்வனவு செய்கிறார். இதன் மூலம் இலாபமடையும் மஹிந்த சகோதர நிறுவனம் இனிமேல் குடுமிமலை மரங்களை விற்றும் இலாபமடைய எதிர்காலத்தில் குடுமிமலை மர நிறுவனம் என்று ஒன்று உருவாக்கப்பட்டால் கூட ஆச்சரியப்படமுடியாது. - என்றார் அவர். (சி)

# கட்டாக்காலி நாய்களை கொல்லாதீர் ஜனாதிபதி கடுமையான உத்தரவு

கொழும்பு, ஜூலை13

வீதிகளில் அலைந்து திரியும் கட்டாக்காலி நாய்களைக் கொல்லவேண்டாம் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உள்நாட்டு அலுவல்கள் மற்றும் மாகாணசபை அமைச்சருக்கு கடுமையான உத்தரவு பிறப்பித்துள் ளார்.

இது தொடர்பாக கடந்த புதன்கிழமை ஜனாதிபதி செயலகம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

கட்டாக்காலி நாய்களின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கும், அவற்றினால் பரப்பப்படும் நோய்களை கட்டுப்படுத்துவதற்காகவும் கட்டாக்காலி நாய்களை கொல்ல வேண்டாம் என்றும் -

அவற்றுக்கு மாறாக அவற்றை மலடாக்குவது. அவற்றினால் நோய்கள் ஏற்படாதவாறு தடுப்பதற்குத்தடுப்பூசி போடுதல் போன்ற மனிதாபிமான நடவடிக்கைகளை வலுப்படுத்தவேண்டும் என்றும் ஜனாதிபதி உத்தர விட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் பீனிசம், பீனிச வாய்வு, இளநரை, தலையிடி, தலைப்பாரம், மூக்கினால் இரத்தம் வடிதல், காதடைப்பு, கண்மங்கல் என்பவற்றால் அவதிப்படுகின்றீர்களா?
இதோ பாவியுங்கள்!
கண்ணுக்குக் குளிர்ச்சியும் முகத்திற்கு அழகும் உண்டாக்கி கூந்தலை நீளமாகவும், கறுப்பாகவும், அழகாகவும் வளரச்செய்யும் சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட

**சித்தாரா பொன்னாங்காணி தைலம்**

யாழ்.குடாநாட்டின் அனைத்து பார்மஸிகளிலும் கடைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.

Manufactured By:
**SITHARA PRODUCTS**
Puttalam Road,
Chilaw.
(Reg.No. 6382)AR/PR/No-228

யாழ்.மாவட்ட
ஏக விநியோகஸ்தர்:-
**சிவா நறுமணப் பூங்கா**
இல.288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

**குறிப்பு:** எங்களின் பொன்னாங்காணி தைலத்தின் பெட்டியில் எழுத்து மிகவும் தெளிவாகத் தெரியும். போலியான பொன்னாங்காணி தைலத்தின் எழுத்து தெளிவற்றதாக இருக்கும். அத்துடன் போலிப் பெட்டிகளின் அடிப் புறத்தில் உற்பத்தித் திகதியும் முடிவு திகதியும் குறிப்பிடப்படவில்லை. இதிலிருந்து போலித் தயாரிப்புக்களை நீங்கள் கண்டுகொள்ளலாம். (சி-52815)

**KATHIRAVAN PC AND ELECTRONICS WORKSHOP**
**நடமாடும் சேவை**
மொனிற்றர், ஸ்கானர், பிறின்டர், யு.பி.எஸ், சி.பி.யு என்பன சிறந்த முறையில் திருத்தி உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்.
KATHIRAVAN PC WORKSHOP,
KOPAY NORTH, KOPPAY.
(62647) T.P.: 0779263604

**The phone Shop Manipay**
எம்மிடம் சகலவிதமான Hand Phone களும்
* Soft ware * Hard ware Repairing செய்து கொடுக்கப்படும்.
குறிப்பு:- Nokia, 6630, 6680, 6681, N70, N91
என்பன Unlock செய்து கொடுக்கப்படும்.
Address: **The Phone Shop**
Alady Junction, Manipay.
T.P.No. 0777571910 (62457)

## பாராட்டி வாழ்த்துகிறோம்



### உயர்திரு சிவகுருநாதன் திருவாகரன்

வலி.தெற்குப் பிரதேச செயலாளராகச் சிறந்த சேவையாற்றி வட மாகாண சபையின் புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சின் செயலாளராக பதவி உயர்வு பெற்றுச் செல்லும்
**உயர்திரு. சிவகுருநாதன் திருவாகரன்** அவர்களைப் பாராட்டுவதோடு மென்மேலும் பல பதவி உயர்வுகளைப் பெற்று சிறந்த சேவையாற்ற இறைவனை வேண்டி வாழ்த்துகின்றோம்.

**கிராம அபிவிருத்திச் சங்கம்,**
**சங்குவேலி.**
(62645)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
### ஆறுமுகம் முருகதாஸ்



மண்ணில்: 01 * 02 * 1964
விண்ணில்: 24 * 06 * 2006
திதி: சதுர்த்தசி 2007.07.13


பெற்று எமை வளர்த்து
கல்வி தந்து உடல் வருத்தி
எம் உயர்வுக்கு உழைத்த உத்தமரே!
மறவோம் என்றும் உம்மை.
ஆத்ம சாந்திக்குப்
பிரார்த்திக்கின்றோம்.

நவக்கிரி,
நிலாவரை, புத்தூர். (62641)

**மனைவி,**
**பிள்ளைகள்.**

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 30 * 11 * 1949



உதிர்வு 13 * 06 * 2007

### அமரர் குமாரசுவாமி சந்திரகுமார்

(ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர், நீர்ப்பாசன இலாகா, யாழ்ப்பாணம்)
**திதி: அபரபட்ச சதுர்த்தசி**

இன்று (13.07.2007) வெள்ளிக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகளிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

முன்பள்ளி லேன்,
ஊரெழு கிழக்கு, ஊரெழு. (62610)

**மனைவி, E.S.தம்பிமுத்து**
**குடும்பத்தினர்.**

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மண் மகிழ
14.05.1960

கண் நெகிழ
18.06.2007

### திருமதி அந்தோனிப்பிள்ளை மேரிகொன்செப்ரா

கண்ணீரோடு ஒரு திங்கள் கரைந்து மறைந்ததம்மா
அன்பான மனைவியாய் பாசமிகு அம்மாவாய்
நீர் வாழ்ந்த வாழ்க்கையின் இனிய சுவடுகள்
கனவாகிப் போன மாயம் என்ன!

ஒருபோதும் எனைப் பிரியாத உறவென்று நினைத்தேன்
உங்கள் கரம் எந்தன் துணையென்று எண்ணினேன்
கடைசி வரை என்னுடனிருப்பீர் என்று கூறி
இடைநடுவில் எனைப் பிரிந்து சென்றதேனோ!
ஆயிரம் உறவுகள் சேர்ந்து வந்து நின்றாலும்
உங்களுக்கு எதுவும் ஈடாகாது தெய்வமே!

அம்மா எமைவிட்டுச் சென்று ஒரு திங்கள் ஆனது
உங்களோடு வாழ்ந்த கால நினைவுகள் எம்
கண்முன் நிழலாடி முள்ளாய் குத்துகிறது
அம்மா உயிரினை, உணர்வினைக் கொடுத்து
உடலினை வளர்த்து, உம்மை உருக்கி - எமை
உருவாக்கிய மெழுவர்த்தி நீங்கள்

அன்பான மனைவியாய் அப்பாவுக்கு,
ஆசையான அம்மாவாய் எமக்கு,
நல்ல பெண்ணாய் உற்றார்க்கும், வாழ்ந்து
இன்று எமை திடீரென விட்டுச் சென்றதேனோ!

குணத்தில் உயர்ந்த குங்குமத்தாயே - உம்
நினைவுகள் நித்தமும் எம் நெஞ்சிலே
நிழலாய் தொடர்கிறதே - அம்மாக்குட்டி!
என்றும் உம் நினைவுகளுடன் வாழ்வோம்.

13.06.2007 அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்பத்தலைவியின் இறுதிச் சடங்கில் கலந்துகொண்ட உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் நேரில் வந்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலிருந்தும் தமது அனுதாபத்தைத் தெரிவித்தவர்களுக்கும் இறுதி யாத்திரையில் கலந்துகொண்டவர்களுக்கும் பல்வேறு வழிகளில் உதவி செய்து எமது துயரத்தில் பங்கு கொண்ட அனைவருக்கும் எமது நன்றிகளைத்தெரிவித்துக்கொள்கின்றோம்.

142, முதலாம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம். (62623)

உங்கள் [illegible]
**கணவர், பிள்ளைகள்.**

## 7 ஆம் ஆண்டு நினைவலையில்



அமரர்
### சோ.சஞ்ஜீவன்

(யாழ்.இந்துக் கல்லூரி மாணவன், உயர்தரம், கணிதப்பிரிவு 2001)

தோற்றம் 26 * 07 * 1982
மறைவு 13 * 07 * 2000

சஞ்ஜீவா! விண்ணேகி இன்றோடு
ஏழு ஆண்டுகள்ஆனதுவோ!
கண் நனைந்து துயர்கின்றோம்
உன் நினைவில்.

122 9/6, பூநாறி லேன்,
கே.கே.எஸ். றோட்,
யாழ்ப்பாணம். (62642)

**த.க.சோமசுந்தரம்**
**குடும்பத்தினர்.**

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மலர்வு 01.02.1917
உதிர்வு 13.06.2007

### திருமதி சின்னப்பு பொன்னம்மா

எங்கள் குடும்பத்திற்கு ஒளி ஏற்றி
எங்களை மேன்மை
பெற்று வாழ வழி காட்டிய
''செந்திருவே'' அம்மா!
மெழுகுவர்த்தி போல் உங்களை உருக்கி
எங்களை
ஏணியாய் உயர்த்தினீர்களே!
அம்மா! எப்பிறப்பில் உங்களை நாம்
பார்ப்போம்
மறுபிறப்பு என்று ஒன்று உண்டென்றால்,
மறுபிறப்பு
என்பது உண்மையானால் எப்பிறப்பாகிலும்
நீங்கள் எங்களிற்கு அம்மாவாகவும், மாமியாகவும்,
பேத்தியாகவும், பூட்டியாகவும் கிடைக்க
வேண்டுமென
அச்சுவேலி உலவிற்கரைக்குளம் சித்தி விநாயகரையும்
தொண்டைமானாறு செல்வச்சந்நிதி
முருகனையும் வேண்டி
அன்னாரது ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்.

எங்கள் அன்புத் தாயின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும், பல வழிகளிலும் உதவிகள் புரிந்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கும், தொலைபேசி, தந்திகள் மூலம் ஆறுதல் கூறிய அனைவருக்கும் எங்கள் உளமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இன்று (13.07.2007) வெள்ளிக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரணக் கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**பிள்ளைகள்:** திருமதி த.சத்தியவிமலாதேவி (ஓய்வுபெற்ற விடுதி மேற்பார்வையாளர், அ.ஆ.ப.கலாசாலை, கோப்பாய்), திருமதி இ.சமரக்கொடி(லண்டன்), கு.கமலேஸ்வரி, சி.பிறேமநாதன் (கிளைமுகாமையாளர், ப.நோ.கூ.சங்கம், அச்சுவேலி), சி.அபூர்வசூரியா (லண்டன்), காலஞ்சென்றவர்களான செல்வி.சற்குணராணி, சத்தியேஸ்வரன்.

**மருமக்கள்:** செ.தம்பித்துரை (அமரர் - டாவின் அன்ட் கொம்பனி, கொழும்பு), இ.சிவபாதம் (லண்டன்), க.குகனேஸ்வரன் (வலி.கிழக்கு பிரதேச சபை, அச்சுவேலி), சி.மங்களேஸ்வரி, திருமதி அ.ஸ்ரீபவானி (லண்டன்).

**பேரப்பிள்ளைகள்:** லண்டனில் வசிப்பவர்களான க.சுதாகரன், சு.வைஹரி, சி.தர்சிஹா, தீரஜன், நீரஜன், சபீனா, சஜீனா, சஜானா, சுபாஸ், அச்சுவேலியில் வசிப்பவர்களான மயூரனி, [illegible], ஹம்சுதன், வேணுஜா, வினோஜா. சு.சலினியின் பூட்டியும்.

"[illegible]", அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி. (62687)

**சி.பிறேமநாதன்** (மகன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# சாட்சிகளைப் பாதுகாத்தால்தான் உண்மைகள் அம்பலத்துக்கு வரும்

படுகொலைகள் உட்பட குறிப்பிட்ட சில மனித உரிமை மீறல் சம்பவங்கள் குறித்து விசாரிப்பதற்கு ஜனாதிபதி ஆணைக் குழு ஒன்று நியமிக்கப்பட்டிருப்பதும், அந்த ஆணைக் குழுவின் விசாரணைகளைக் கண்காணிக்க சர்வதேசப் பிரமுகர்களைக் கொண்ட கண்காணிப்புக் குழு ஒன்று நியமிக்கப்பட்டிருப்பதும் நமக்குத் தெரிந்த விடயங்கள்.

இந்த விசாரணை ஆணைக்குழுவின் செயற்பாடுகள் குறித்து பகிரங்கப்படுத்தப்பட்ட இரு அறிக்கைகள் மூலம் சர்வதேசக் கண்காணிப்புக் குழு குறை கூறியிருப்பது, பரவலாக இடம்பெறும் மனித உரிமை மீறல் விடயங்களைச் சமாளிப்பதற்கு இலங்கை அரசுத் தலைமை எடுத்துவரும் நடவடிக்கைகளுக்கு விழுந்த அடி என்றே கொள்ளலாம்.

சர்வதேசக் கண்காணிப்புக் குழு சுட்டிக்காட்டிய பல்வேறு குறைபாடுகளில் முக்கியமானது, மனித உரிமை மீறல் சம்பவங்கள் தொடர்பான சாட்சிகளைப் பரதுகாப்பதற்கு உரிய நடைமுறைகளை இலங்கை அரசுத் தரப்பு எடுக்கவேயில்லை என்ற விவகாரம்தான்.

உண்மையில் மிகுந்த சிரத்தைக்கும், கவனிப்புக்கும் உள்ளாக்கப்படவேண்டிய முக்கியமான விடயம் இது.

மனித உரிமை மீறல்களில் ஈடுபடும் அதிகார வர்க்கம் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு அதற்காகத் தண்டிக்கப்பட வேண்டுமானால் -

இனிமேல் இத்தகைய மனித உரிமை மீறல் சம்பவங்கள் நடைபெறாமல் தவிர்க்கப்பட - தடுக்கப்பட - வேண்டுமானால்-

ஏற்கனவே இடம்பெற்ற தவறுகள், குற்றங்கள் தொடர்பான சாட்சியங்கள், சாட்சிகள் பாதுகாக்கப்படுவது அவசியமாகும்.

உண்மைய்ய சட்டத்தின் முன் தாங்கள் அம்பலப்படுத்துகின்ற மைக்காகத் தண்டிக்கப்படவோ, உயிர்க்கொலைக்கு உள்ளாக்கப்படவோ மாட்டோம் என்று உறுதி சாட்சிகளுக்கு வழங்கப்பட வேண்டும்.

அத்தகைய உறுதிப்பாட்டையும், நம்பிக்கையையும் சாட்சிகளுக்கு அளிப்பதாயின் சாட்சிகளைப் பாதுகாப்பதற்கான முதன்மையான திட்டம் ஒன்று இன்றியமையாததாகும்.

அதுதான் இலங்கையில் இல்லை என்பது மனவேதனைக் குரியது.

மேற்படி படுகொலைகள் உள்ளிட்ட மனித உரிமை மீறல் சம்பவங்களை விசாரிப்பதற்கு நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக் குழுவே நீண்ட இவ்வளவு காலமாகியும் - பல மாதங்கள் கடந்தும் கூட - சாட்சிகளைப் பாதுகாப்பதற்கான உரிய - தோதான - கட்டமைப்பு ஒன்றை உருவாக்காதிருக்கின்றமையை குறித்துக் குறை கூறியிருப்பதும் கவனிக்கத்தக்கது.

சாட்சிகளைப் பாதுகாப்பதற்கான கட்டமைப்பு இல்லாத நிலையில் மேற்படி மனித உரிமை மீறல் சம்பவங்கள் பற்றிய விசார ணைகளை ஆரம்பிப்பது, சாட்சிகளை ஆபத்தில் ஆழ்த்துவது மட்டுமல்ல, மேற்படி மனித உரிமை மீறல் சம்பவங்கள் பற்றிய உண்மைகள் எதிர்காலத்தில் கூட அம்பலமாவதற்கான வாய்ப்புகளை இல்லாமல் செய்து, அது தொடர்பான மர்மங்களை நிரந்தரமாகக் குழிதோண்டிப் புதைக்கவே வழிசெய்வதாக அமையும் என்பதும் இப்போதைய நிலையில் கவனத்தில் கொள்ள வேண்டிய அம்சமாகும்.

ஜனாதிபதி ஆர். பிரேமதாஸ அதிகாரத்தில் இருந்த சமயம் ஸ்ரீலங்கா மக்கள் கட்சியின் தலைவர் விஜே குமாரணதுங்க சுட்டுக் கொல்லப்பட்டார். பிரேமதாஸாவின் ஆட்சிக் காலத்தில் அப் படுகொலை விவகாரம் கிணற்றில் போட்ட கல்லாக அமிழ்ந்து கிடந்தது. அதனால் சாட்சிகளும், சாட்சியங்களும் அப்படியே தப்பிப்பிழைக்கும் வாய்ப்புக்கிட்டியது. பின்னர், ஆட்சி மாற்றம் ஏற்பட்டு, கொலையுண்ட விஜே குமாரணதுங்கவின் மனைவி சந்திரிகா குமாரதுங்க ஜனாதிபதியான பின்னர் அக்கொலை பற்றிய விசாரணைகள் முடுக்கிவிடப்பட்டன. உண்மை அம்பலமானது. குற்றவாளிகள் அடையாளம் காணப்பட்டனர்.

தப்பித் தவறி, முன்னைய ஆட்சியிலேயே விஜே குமாரதுங்க படுகொலை தொடர்பான கண்துடைப்புப் புலன் விசாரணை நடத்தப்பட்டிருக்குமானால் சாட்சிகள், சாட்சியங்கள் அடிபட்டுப் போயி ருக்கலாம். உண்மை மூடி மறைக்கப்பட்டிருக்கலாம். குற்றம் புரிந்தோர் அடையாளம் காணப்படாமலேயே தப்பியிருப்பர்.

ஆகவே, இத்தகைய மோசமான சம்பவங்கள் தொடர்பான விசாரணைகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் அவை தொடர்பான சாட்சிகளைப் பாதுகாப்பதற்கான கட்டமைப்பை உருவாக்குவதும் உறுதிப்படுத்துவதும் அவசியமானது; கட்டாயம் செய்யவேண்டி யது.

இன்று ஆள்கடத்தல்கள், காணாமற் போகச் செய்தல்கள், படுகொலைகள் என மோசமான மனித உரிமை மீறல்கள் இடம்பெறும் அவலப் பூமியாகத் திகழ்வது யாழ். குடா நாடு. இந்தக் கொடூரங்களை அங்கு கட்டுப்படுத்துவதற்குக் காத்திரமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியது அத்தியாவசியமானதாகும்.

அப்படி அவற்றைக் கட்டுப்படுத்துவதாயின் அத்தகைய மோசமான சம்பவங்களில் ஈடுபடும் தரப்புகள் முதலில் அடையாளம் காணப்பட்டு அம்பலப்படுத்தப்படவேண்டும். அதற்கு ஒரு வாய்ப்பு இப்போது கிட்டியிருக்கின்றது.

கடத்தப்பட்டு இருள் சிறையில் சுமார் இரண்டு மாதங்கள் அடைக்கப்பட்டிருந்த உயர்தர வகுப்பு மாணவர்கள் மூவர் இப்போது தப்பிப் பிழைத்திருக்கின்றார்கள்.

உரிய பாதுகாப்பும், எதிர்கால உறுதிப்பாடும், உயர்கல்வி மற்றும் வாழ்வுக்கான தஞ்சமும், வசதி வாய்ப்புகளும் அவர்களுக்கு அளிக்கப்படும்போது -

தமது நிம்மதியான எதிர்கால வாழ்வும் பாதுகாப்பும் நிச்சயம் என்ற நம்பிக்கை அவர்களுக்கு ஏற்படும்போது -

அந்த மூன்று மாணவர்கள் மூலம் குடாநாட்டின் கொடூரங்களுக்குக் காரணமான - பின்னணியான - அரூபக் கரங்களை அடையாளம் காணும் சந்தர்ப்பம் கிட்டும்.

அதன் மூலம் குற்றத்தரப்புகளை அடையாளம் கண்டு, அவற்றின் முகத்திரையைக் கிழிக்க முடியும்.

மேற்படி மனித உரிமை மீறல்கள் குறித்தும் அவற்றைக் கண்டிக்கும் விதத்திலும் சகட்டு மேனிக்கு அவ்வப்போது அறிக்கை வெளியிட்டுவிட்டு, அதற்கு மேல் பயனுள்ள எதையும் மேற்கொள்ளாமல் அடங்கிவிடும் சர்வதேச சமூகத்துக்கு இவ்விடயம் சமர்ப்பணம்.

உலக சமுதாயம் தலையிட்டு, உண்மையை அம்பலப் படுத்துவதற்கு வாய்ப்பான விடயம் இது. சர்வதேசமே! உனது பிரதிபலிப்பு என்ன?

# சிமெந்து மற்றும் பொருள்களுக்குத் தட்டுப்பாடு; கட்டடப் பணிகள் இடைநிறுத்தப்பட்டன

யாழ்ப்பாணம்,ஜூலை 13

குடாநாட்டில் சிமெந்து உட்பட கட்டடப் பொருள்களுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு மற்றும் விலையேற்றம் காரணமாக கட்டடத் திணைக்களத்தால் முன்னெடுக்கப்பட்டுவந்த கட்டடப் பணிகள் அனைத்தும் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக அறிய வருகிறது.

குடாநாட்டில் கடந்த காலத்தில் அரச நிறுவனங்களுக்குரிய பல்வேறு கட்டடப் பணிகள் கட்டத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

ஆயினும் கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையை அடுத்து, குடாநாட்டில் கட்டடப் பொருள்களுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டது.

இதையடுத்து கட்டடத் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட கட்டடப் பணிகள் அனைத்தும் இடைநிறுத் தப்பட்டுள்ளன.

சிமெந்து, மணல், கல் ஆகியவற்றுக்கு ஏற்பட்டுள்ள கடும் தட்டுப்பாடு காரணமாக இந்தப் பணிகளை முன்னெடுக்க முடியாத நிலை உள்ளதாகக் கட்டடத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

தற்போது கட்டடப் பொருள்கள் கப்பல் மூலம் குடாநாட்டுக்கு எடுத்து வரப்படுகின்ற போதிலும், அவற்றின் அதிக விலை, நாளாந்த விலைத்தளம்பல் ஆகியவற்றின் காரணமாக திட்டங்களை உரிய முறையில் மதிப்பீடு செய்து செயற்படுத்த முடியாதுள்ளதாகவும் அதே வட்டாரங்கள் தெரிவித்தன.

ஏ-9 வீதி திறக்கப்பட்டு அதனூடாகப் பொருள்கள் எடுத்துவரப்பட்டால் மட்டுமே இனிமேல் கட்டடப் பணிகளை மேற்கொள்ளக் கூடியதாக இருக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-50)

## தீவக வலயமட்ட ஆங்கில தினப் போட்டி

யாழ்ப்பாணம்,ஜூலை 13

தீவக வலய மட்டத்திலான 2007 ஆம் ஆண்டுக்கான ஆங்கில தினப் போட்டிகள் இன்று வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

கோட்ட மட்டத்தில் இடம்பெற்ற போட்டிகளில் முதல் இரு இடங்களையும் பெற்ற மாணவர்கள் இன்றைய போட்டியில் கலந்துகொள்வர். (203)

## ஹென்றியரசர் கல்லூரியின் நூற்றாண்டு விழா நாளை

யாழ்ப்பாணம்,ஜூலை 13

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியின் நூற்றாண்டு விழா நாளை சனிக்கிழமை கொண்டாடப்படுகின்றது.

இவ்விழாவில் பிரதம விருந்தினராக யாழ்.மறை மாவட்ட ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை கலந்துகொண்டு திருப்பலி நிறைவேற்றுவார்.

சிறப்பு விருந்தினராக யாழ்.மறை மாவட்டக் குரு முதல்வரும் புனித பத்திரிசியார் கல்லூரி அதிபருமான அருட் கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப் பிரகாசமும், விசேட விருந்தினர்களாக யாழ்.பல்கலைக்கழகப் பதில் துணைவேந்தர் பேராசிரியர் ஆர்.குமாரவடிவேல், வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் ஆகியோரும் கலந்து கொள்வார்கள்.

திருப்பலியின் பின் பாடசாலை வளாகத்தில் நடைபெறும் நிகழ்வில் விருந்தினர்களின் உரைகளும் கலை நிகழ்வுகளும் இடம்பெறும்.

(50-153)

# வர்த்தகர்களிடம் கப்பம் கேட்டு மிரட்டியவரை பொதுமக்கள் பிடித்துப் பொலிஸில் ஒப்படைத்தனர்!

## அவரைத் தடுத்து வைக்க நீதிமன்றம் அனுமதி

யாழ்ப்பாணம்,ஜூலை 13

வலி.மேற்குப் பகுதியில் வர்த்தகர்களிடம் கப்பம் கேட்டு மிரட்டியதாகக் கூறப்படும் ஒருவர் பொதுமக்களால் பிடிக்கப்பட்டுப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். அவர் நேற்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டார்.

அராலி வடக்கு, வட்டுக்கோட்டையைச் சேர்ந்த நாகமுத்தன் நடராஜசிவம் என்ற குடும்பஸ்தரே கைது செய்யப்பட்டவர் ஆவார்.

விடுதலைப் புலிகளின் பெயரைக் கூறி வர்த்தகர்களிடம் கப்பம் கேட்டு மிரட்டியதாகக் கூறப்படும் சம்பந்தப்பட்டவர் பொதுமக்களால் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் கையளிக்கப்பட்டதாக நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

மல்லாகம் நீதிவான் திருமதி ச.இளங்கோவன் முன் நேற்று ஆஜர் செய்யப்பட்ட வேளை பொலிஸார் இந்த விவரங்களைத் தெரிவித்தனர்.

சந்தேக நபரைத் தடுத்து வைத்து விசாரணை செய்ய நீதிவானிடம் பொலிஸார் அனுமதி கோரினர்.

காங்கேசன்துறை தடுப்பு முகாமில் தடுத்து வைக்க அனுமதி வழங்கிய நீதிவான், சட்ட வைத்திய அதிகாரி முன்னிலைப்படுத்தி மருத்துவ அறிக்கை சமர்ப்பிக்கும்படியும் உத்தரவிட்டார்.

(அ-1)

## மட்டக்களப்பு முஸ்லிம் பகுதிகளில் கடையடைப்பு

மட்டக்களப்பு, ஜூலை 13

மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம் பிரதேசங்களில் நேற்றுப் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. ஓட்டமாவடி, வாழைச்சேனை, காத்தான்குடி, ஏறாவூர் பகுதிகளில் ஹர்த்தால் காரணமாக இயல்பு வாழ்க்கை முற்றாகப் பாதிக்கப்பட்டது.

ஓட்டமாவடியில் நேற்று முன்தினம் முஸ்லிம் ஊர்காவலர் ஒருவர் ஆயுதக் குழுவொன்றினால் சுடப்பட்டுப் படுகாயப் படுத்தப்பட்டமையையும், மற்றொரு சிவிலியன் சுட்டுக்கொல்லப்பட்டமையையும் கண்டித்தே இந்த ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டதாகத் துண்டுப்பிரசுரங்களில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதனால் நேற்று அங்கு வர்த்தக நிலையங்கள் , பாடசாலைகள், வங்கிகள், அரச அலுவலகங்கள், பொதுச் சந்தைகள் என்பன இயங்கவில்லை. வீதிகள் வெறிச்சோடிக் காணப்பட்டன. நகரங்களில் கறுப்பு, வெள்ளைக் கொடிகள் தொங்கவிடப்பட்டிருந்தன.

## வடமராட்சி கிழக்கின் கிராமங்களில் மக்கள் வங்கியின் நடமாடும் சேவை

குடத்தனை ஜூலை.13

வடமராட்சி கிழக்கில் உள்ள பிரதேசங்களான குடத்தனை, அம்பன், மணற்காடு, பொற்பதி, நடுக்குடத்தனை, விளாங் காடு ஆகிய இடங்களில் வசிக் கும் மக்களின் நன்மை கருதி மக்கள் வங்கியின் பருத்தித்துறைக் கிளை நடமாடும் சேமிப்புக் கருமபீடம் ஒன்றை ஆரம்பிக்கவுள்ளது.

இந்தக் கருமபீடம் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு குடத்தனைமேற்கு சுடர்ஒளி சனசமூக நிலையத்தில் ஆரம்பித்துவைக்கப்படும்.

இந்நிகழ்வில் மருதங்கேணி பிரதேச செயலர், பருத்தித்துறை பிரதேசசபை, நகரசபைச் செயலாளர்கள் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்தக்கருமபீடம் சனிக்கிழமை தோறும் 9 மணி தொடக்கம் 11 மணிவரை திறந்திருக்கும் என்று தெரிவிக்கப்பட்டது. (அ-1-78)

# கொழும்பு மேயருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம்

## 21 மேலதிக வாக்குகளால் நேற்று நிறைவேறியது

கொழும்பு, ஜூலை 13

கொழும்பு மாநகர மேயர் இம்தியாஸ் உவைஸ் மற்றும் பிரதிமேயர் எஸ். இராஜேந்திரன் ஆகியோருக்கு எதிராக கொழும்பு மாநகரசபையில் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை நேற்று நிறைவேற்றப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

நம்பிக்கையில்லாத் தீர்மானம் மாநகரசபைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டாலும் மேயர், பிரதி மேயர் ஆகியோர் அதன் காரணமாக பதவி இழந்தவர்களாக மாட்டார்கள் என விடயமறிந்த சட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

மேயர் நேரடியாக மக்களின் அதிக வாக்குகளால் தெரிவுசெய்யப்பட்டவர். அவரது நிர்வாகம் நிதிப் பிரேரணை ஒன்றில் தோற்கடிக்கப்படாத நிலையில் - அவருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் மூலம் - அவரைப் பதவியிலிருந்து அகற்ற முடியாது எனக் கூறப்பட்டது.

கொழும்பு மேயர், பிரதி மேயர் ஆகியோருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கான முன்னறிவித்தல் இரண்டு வாரங்களுக்கு முன்னரே எதிரணியினரால் கொடுக்கப்பட்டிருந்தது.

ஐ.தே.கட்சி எம்.பியான ரவி கருணநாயக்காவின் கோரிக்கையின் பேரில் சில துப்புரவுப் பணிகளுக்கான நடவடிக்கைகளுக்கு மேயர் தமது மாநகரசபை ஆளணி மூலம் ஒத்துழைத்தார் என்றும்-

அதற்கு எதிராகவே இந்தப் பிரேரணை கொண்டு வரப்பட்டதாகவும் கூறப்பட்டது.

நேற்று சபை அமர்வின்போது இந்தப் பிரேரணை எடுத்துக்கொள்ளப்பட்டது. விவாதம் மிகச் சூடாக நடைபெற்றது.

கொழும்பு மாநகர சபையின் 53 உறுப்பினர்களில் இருவர் வெளிநாடு சென்றுள்ளனர். எஞ்சிய 51 உறுப்பினர்களும் சபையில் பிரசன்னமாகியிருந்தனர்.

விவாதம் சூடு பிடித்தபோது ஒரு கட்டத்தில் - பிற்பகல் 3.10 மணியளவில் - மேயரும்,பிரதி மேயரும், அவரது கீண்ணாடிச்சின்ன சுயேச்சைக் குழுவின் உறுப்பினர்களும், மேயருக்கு ஆதரவான பொது மக்கள் ஐக்கியமுன்னணி உறுப்பினர்கள் ஐவரும் சபையை விட்டு வெளிநடப்புச் செய்தனர்.

தாம் சபையை ஒத்திவைக்கின்றார் என்றோ, சபை அமர்வு நிறுத்தப்படுகின்றது என்றோ கூறாமல் மேயரும் அவரோடு பிரதி மேயர் உட்பட ஏனையோரும் வெளிநடப்புச்செய்ய, சபையில் எதிரணியைச் சேர்ந்த உறுப்பினர்கள் 21 பேர் எஞ்சினர்.

பொதுஜன ஐக்கிய முன்னணி (வெளியேறிய ஐவரைத் தவிர எஞ்சியோர்), ஜே.வி.பி., மேலக மக்கள் முன்னணி, மலையக மக்கள் முன்னணி, முஸ்லிம் காங்கிரஸ், நுவா ஆகியவற்றைச் சேர்ந்த இந்த 21 உறுப்பினர்களும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த ஆரியரத்ன வெதகே என்பவரைத் தலைவராகத் தெரிவு செய்து தொடர்ந்து கூட்டத்தை நடத்தினர்.

பிற்பகல் 3.40 மணியளவில் பிரேரணை வாக்கெடுப்புக்கு விடப்பட்டது.

சபையிலிருந்த அனைவரும் பிரேரணையை ஆதரிக்க அது ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது என அறிவிக்கப்பட்டது. (சி)

## நாளை

| | |
|---|---|
| ஆனி - 30 | சனிக்கிழமை 14.07.2007 |
| திதி : அமாவாசை | முன்னிரவு 06.36 |
| நட்சத்திரம் : புனர்பூசம் | பின்னிரவு 05.04 |
| சுபநேரம் | : 03.00 - 04.30 |
| இராகுகாலம் | : 09.00 - 10.30 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரெலோ அலுவலகம் மீதான தாக்குதல் அரசின் இன வெறியின் அடையாளமே

## சாடுகிறார் சிவாஜிலிங்கம் எம்.பி.



கொழும்பு, ஜூலை 13

தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) ஒரு அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி. இந்தக் கட்சி மீது பயங்கரவாத முத்திரைகுத்துகின்ற அரசின் இனவெறியின் அடையாளமாகவே வவுனியாவில் எமது அலுவலகம் தாக்கப்பட்டதை நாங்கள் கருதுகின்றோம்.

-இவ்வாறு ரெலோ அமைப்பைச் சேர்ந்த தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜி லிங்கம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது-

தமிழீழ விடுதலை இயக்கம் ஒரு அரசியல் கட்சியாக ஜனநாயக வழியில் திரும்பி இன்று நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்களை கொண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கின்றது. இக்கட்சி மீது பயங்கரவாதச்சாயத்தைப் பூசுவதற்கு இலங்கை அர்சு முற்படுகின்றது. இது அரசின் அப்பட்டமான இனவெறி நடவடிக்கையின் வெளிப்பாடாகும்.

முன்னர் ஒருமுறை ரெலோ அமைப்பில் பல வருட காலமாக அங்கம் வகிக்கின்ற ஒருவரை சுட்டுக் கொன்றுவிட்டு அவரை ஒரு பயங்கரவாதியாக படையினர் அடையாளப்படுத்தினர். அதேபோன்று இன்று ரெலோ இயக்கத்தின் தலைமைக் காரியாலயத்தை முற்றுகையிட்ட விடயத்திலும் படையினர் நடந்துகொண்டுள்ளனர்.

மும்மொழியிலும் எமது அலுவலகத்தில் எழுதப்பட்ட விளம்பரப் பலகைகள் உள்ளன. மற்றும் எமது இயக்கத்தின் கொடியும் அங்கு பறக்கவிடப்பட்டிருக்கின்றது. எமது அலுவலகத்திற்கு அருகில் படையினரின் காவலரணும் உள்ளது.

வவுனியாவிலுள்ள பொலிஸார் மற்றும் படையினர் இதனை நன்கு அறிவர். எமது அலுவலகத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதலை மறைப்பதற்காக தற்போது படையினர் தங்கியுள்ள வீடுகளின் மீது எமது அலுவலகத்தில் இருந்து தாக்குதல் நடத்தப்பட்டது எனக் கூறப்படுவது ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்றல்ல.

இவை அனைத்தும் அரசின் இனவெறியின் அடையாளமாகவே தென்படுகின்றது- என்றார். (சி)

## காரைதீவு படைமுகாமிலுள்ள அதிரடிப்படை சிப்பாய் மீது சூடு

கல்முனைக்குடி, ஜூலை 13

சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காரைதீவு விசேட அதிரடிப்படை முகாமைச் சேர்ந்த கே.பி.என். விஜேய சிங்க (வயது - 27) என்ற படைச்சிப்பாய் நேற்று வியாழக்கிழமை துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமானார்.

முகாமின் பின்புறத்தில் காவல் கடமையில் ஈடுபட்டிருந்தபோது இவரது நெஞ்சில் சூடு விழுந்துள்ளது எனக் கூறப்படுகின்றது.

ஆபத்தான நிலையில் கல்முனை அஸ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பலனளிக்காமல் போகவே அங்கு அவர் மரணமானார்.

இச்செய்தி அச்சுக்குப்போகும்வரை இறந்தவரின் நெஞ்சின்மீது எவ்வாறு -எங்கிருந்து துப்பாக்கிச்சூடு விழுந்தது என்பது யாருக்கும் தெரியவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (சி)

## ரெலோவின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யப்பட்டார். அந்த அறைக்கதவு உடைத்துத் திறக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து அங்கு பெரும் பதற்றம் நிலவியது. மேலதிக இராணுவத்தினரும் சம்பவ இடத்திற்கு வரவழைக்கப்பட்டனர்.

நேற்றுப் பிற்பகல் 2.30 மணிவரை தேடுதல் நடவடிக்கை நீடித்தது. அலுவலகத்தில் இருந்த அனைத்துப் பொருள்களும் அடித்து நொறுக்கப்பட்டன.

ரெலோ உறுப்பினர்களான சிவசுப்பிரமணியம், திலீப் ஆகியோர் உட்பட மூவர் கைதுசெய்யப்பட்டனர்.

இந்தத் தேடுதலின்போது ரி - 56 ரகத் துப்பாக்கி - 1, பொலிஸ் சீருடைகள் - 4, பிஸ்டல் - ஒன்று, வோக்கிடோக்கிகள் - 3, ஆட்களுக்கு எதிரான நிலக்கண்ணி - 1 மற்றும் துப்பாக்கி ரவைகள் - 300 என்பன தங்களால் கைப்பற்றப்பட்டன என்று வவுனியாவில் இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதனைத் தொடர்ந்து சம்பவ இடத்திற்குச் சென்ற வவுனியா நீதிபதி எம். இளஞ்செழியன் சடலத்தை வவுனியா மருத்துவமனையில் ஒப்படைக்குமாறு பணித்ததுடன் விசாரணைகளையும் மேற்கொண்டார்.

ரெலோ உறுப்பினர்களை அச்சுறுத்தும் வகையிலும் ரெலோ இயக்கத்தை முடக்கும் வகையிலும் இராணுவத்தினரால் திட்டமிட்டு மேற்கொள்ளப்படுகிற நடவடிக்கை இது என்று வவுனியாவில் உள்ள ரெலோ உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் ரெலோவும் அங்கம் வகிக்கிறது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் ரெலோவின் நான்கு எம்.பிக்கள் உள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (சி)

## அரசியல் ரீதியான வெற்றி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலைமை ஏற்பட்டது. அப்போது கிழக்குப் பகுதி முழுவதும் அரசின் கட்டுப்பாட்டுக்குள் வந்துவிட்டது என அன்றைய அரசு அறிவித்திருந்தது. இருந்தபோதும் மெல்ல மெல்ல முன்னேறி சிறுசிறுதாக்குதலை நடத்திய விடுதலைப் புலிகள் தற்போது இருந்த நிலைக்கு தமது ஆதிக்கத்தைக் கொண்டுவந்தனர்.

இந்த இராணுவ நடவடிக்கையானது அரசியல் ரீதியானதொரு வெற்றியாகக் காண்பிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட ஒன்று.

**அரசு எதிர்பார்த்த பலனைத் தருமா?**

ஆனால், அரசு எதிர் பார்த்த அரசியல் பலனை இது தருமா என்பதற்கு இன்னும் ஒரு சில வாரங்களில் பதில் கிடைக்கும்.

விடுதலைப் புலிகள் இராணுவரீதியாகப் பலமிழக்கும்வரை இதுபோன்ற இராணுவத் தாக்குதல்கள் நடக்கும் எனக் கூறப்படுகிறது. கிழக்கைப் போன்றே வடக்கிலும் இராணுவம் இதுபோன்ற தாக்குதல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளன.

இராணுவத் தாக்குதல்கள் அதிகமாகும்போது, புலிகள் பின்வாங்குவதும், பின்னர் எதிர்த்துத் தாக்குதல் நடத்துவதும் கடந்த 25 வருடகால யுத்தத்தில் இருந்து தெரியவரும் ஒரு யுக்தியாகும். அதே போன்றதொரு நிலைமையை விடுதலைப்புலிகள் எடுப்பார்கள் என்பதும் சந்தேகமில்லை. - எனத் தெரிவித்துள்ளார். (சி)

## அரசுடன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரில்லை. அதனால், அமைதி முயற்சிகளோ, சமாதானப் பேச்சுகளோ இந்த அரசுடன் சாத்தியப்படப்போவதேயில்லை. - என்றார் தமிழ்ச்செல்வன்.

இதேவேளை - இலங்கை அரசின் இராணுவ - பொருளாதார மையங்கள் மீதும் கேந்திர நிலைகள் மீதும் தாக்குதல் நடத்துவதன் மூலம் இலங்கை அரசின் பொருளாதாரத்தை தமது இயக்கம் சீர்குலைக்கப்போகின்றது என்று தமிழ்ச்செல்வன் எச்சரித்ததாக கிளிநொச்சியிலிருந்து ரொய்ட்டர் செய்தியாளர் தெரிவித்தார்.

ரொய்ட்டருக்கு அளித்த பேட்டியில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

''மஹிந்த அரசு தனது இராணுவ நடவடிக்கைகள் மற்றும் இராணுவ ஆட்சியைத் தாக்குப் பிடித்துத் தொடர்வதற்கு அடிப்படையாக அமையும் பொருளாதார மற்றும் இராணுவக் கேந்திர நிலையங்களும், கட்டமைப்புகளுமே இனிமேல் எங்கள் இலக்குகளாகும்''.

இவற்றுள் ஸ்ரீலங்கா எரிபொருள் குதங்களும் உள்ளடக்கப்படும். இவ்வாறான பொருளாதார இலக்குகளை இலக்கு வைப்பதன் மூலம் பொருளாதாரத்தையும் இராணுவ படைவலுவையும் குறைப்பது சாத்தியமாகும் - என்றார். (அ-சி)

## வவுனியா......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புலிகள் அறிவித்துள்ளனர்.

புகை கக்கியவாறு சென்ற விமானம் பின்னர் காணாமற் போனது என்றும் -

விமானம் தங்களது பகுதிக்குள் வீழ்ந்ததா என்பதனை அறியும் பொருட்டு தேடுதலை மேற்கொண்டுள்ளதாகவும் - விடுதலைப் புலிகள் மேலும் தெரிவித்தனர்.

இது குறித்து விடுதலைப் புலிகளின் இராணுவப் பேச்சாளர் இராசையா இளந்திரையன் நேற்று பி.பி.ஸியின் சிங்கள சேவையான 'சந்தேசியா'வுக்கு கருத்துத் தெரிவிக்கும்போது கூறியுள்ளதாவது:-

''நேற்று எமது கட்டுப்பாட்டுப் பகுதிக்கு மேலாக இலங்கை அரசின் கிபிர் விமானம் ஒன்று பறந்து சென்றது. எங்கள் மீது தாக்குதல் நடத்த வந்த இந்த விமானத்தை எமது விமான எதிர்ப்புப் பீரங்கி அணியினர் தாக்கினர். இதன்போது அந்த விமானத்தின் சிலபாகங்கள் எமது கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களில் வீழ்ந்துள்ளன. சில மீட்கப்பட்டுள்ளன. மற்றவை சரியாக எந்தப் பகுதியில் விழ்ந்துள்ளன என்பதைக் கண்டறிய நாங்கள் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளோம்.'' - என்றார். (அ-1)

## தவறான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு அரச தரப்பில் மறுத்திருக்கிறார் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க.

''இது ஒரு பொய்ப்பிரசாரம். புலிகள் தொப்பிகலவில் தோற்கடிக்கப்பட்ட சம்பவத்தை மூடிமறைக்க விரும்புகின்றார்கள். அதற்காகத்தான் இந்தப் பொய்ப் பிரசாரத்தை முன்னெடுத்துள்ளார்கள் - என்று பி.பி. ஸிக்கு நேற்று வழங்கிய பேட்டியில் அவர் தெரிவித்தார். (சி)

## விமானப்படை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டது.

சோதனைச் சாவடியில் நிறுத்துமாறு வழங்கப்பட்ட உத்தரவை மீறி இந்த வாகனம் செல்லமுற்பட்டதாலேயே அதன் மீது சூடு நடத்தப்பட்டதாக விமானப் படைத்தரப்பில் கூறப்பட்டது.

இச்சம்பவத்தில் படுகாயமடைந்த இரு பொலிஸாரும் நீர்கொழும்பு வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

## சமாதானத்தை

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ணமாகும். கிழக்கின் தொப்பிகலவைக் கைப்பற்றியது அரசியல் அழுத்தங்களினால் அல்லாது பயங்கரவாதத்தைத் தோற்கடிக்கச் செய்வதில் பாதுகாப்புத்துறை முன்னெடுத்த பயணத்தின் விளைவேயாகும்.

தாய் மண்ணைப் பயங்கரவாதிகளிடமிருந்து மீட்டு இந்நாட்டுக்குச் சமாதானத்தைக் கொண்டுவருவதற்கு உயிரைத் தியாகஞ் செய்து செயற்படும் எமது படையினருக்கு எனது மனமார்ந்த பாராட்டுகளைத் தெரிவிப்பதற்கு இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்கின்றேன். - எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

## பேச்சுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெற்ற - அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் - ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறியவையாவது:-

அரசு தற்போது கிழக்கு முழுவதையும் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்துள்ளது. முப்படையினரின் தீவிரமான - அர்ப்பணிப்புள்ள - நடவடிக்கையே கிழக்கு அரசின் வசமாகக் காரணம்.

யுத்த வரலாற்றில் என்றுமே இப்படியொரு தனி மாகாணம் புலிகள் வசமிருந்து மீட்கப்பட்டதில்லை. வரலாற்றில் எந்த அரசும் பெற்றிராத வெற்றியை எமது அரசு இப்போது பெற்றுள்ளது.

மாவிலாறு தொடங்கி தொப்பிகல வரை ஒருவருட காலத்திற்குள் கிழக்கு மாகாணம் முற்றாக மீட்கப்பட்டுள்ளது. தற்போது கிழக்கில் இருந்த புலிகளின் அனைத்து முகாம்களும் அரச படைகளால் கைப்பற்றப்பட்டுப் புலிகள் அங்கிருந்து முற்றாக விரட்டியடிக்கப்பட்டுள்ளனர்.

**கிழக்கின் வெற்றி உண்மையானது**

இந்த வெற்றியைத் தொடர்ந்து கிழக்கு மாகாணத்தை முற்றாக அபிவிருத்தி செய்யும் நடவடிக்கையில் அரசு ஈடுபட்டுள்ளது. இதற்கான பல அபிவிருத்தித் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

இந்த அபிவிருத்தித் திட்டங்களின் ஊடாக கிழக்கில் உள்ள மூவின மக்களும் நிம்மதியாகவும் ஒற்றுமையாகவும் வாழ்வதற்கான ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்படும்.

கிழக்கின் வெற்றியானது உண்மையானது. இதில் பொய்யோ அரசியல் பின்னணியோ கிடையாது.

தொப்பிகல கைப்பற்றப்பட்டமையை எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. வெறும் காட்டைத்தான் அரசு கைப்பறியதாக அவர் கூறியிருக்கின்றார்.

இவ்வாறான கூற்றுக்கள் மூலம் படையினரின் மனவலிமையைக் குறைப்பதற்கும் உண்மையான வெற்றியைத் திசை திருப்புவதற்குமே ரணில் முயற்சி செய்கிறார். இவரது கூற்றுக்கள் மூலம் எமது வெற்றிக்கு எந்தப் பங்கமும் வந்துவிடாது.

அரசு இப்போது மிகவும் பலமான நிலையில் உள்ளது. இந்த நிலையில் புலிகளுடன் உடனடிப் பேச்சு நடத்துவதற்கான எந்த ஏற்பாடுகளிலும் அரசு ஈடுபடவில்லை. பேச்சுக்கு வருமாறு அரசு புலிகளுக்கு அழைப்பு எதனையும் தற்சமயம் தனியாக விடவுமில்லை.

அரசு பலமான நிலையில் இருந்துதான் புலிகளுடன் பேச்சைத் தொடங்கும் என்ற நிலைப்பாட்டில் எந்த மாற்றமுமில்லை. - என்றார் அவர். (சி)


SUBRA (14)
சித்தன்கேணி

விவசாய விஞ்ஞானம்
By.
அமுதன் B. Sc. (Hons)
2008 : Sat. & Sun.
4.15 - 6.15
2009: Sat. & Sun
3.00 - 4.15
நடைபெறுகின்றது.

SHAMROCK
J/ EACHCHAMODDAI

★ Gr. 1முதல் O/L வரை
★ ENGLISH MEDIUM
Gr. 6முதல் 10 வரை
★ புலமைப்பரிசில் Gr. 5
(மாதிரிப் பரீட்சைகளுடன்)
★ A/L கலை, வர்த்தக, கணித, விஞ்ஞான பிரிவுகள்.

கருத்தரங்கு
இந்து நாகரிகம்
ப. ஜோதீஸ்வரன்
எதிர்பார்க்கும் வினாக்களுடன்
பொருளியற் கல்லூரி
யாழ்ப்பாணம் - 10.30
D.M.I. - 7.30
காலம்: 15.07.2007 ஞாயிறு
முக்கிய குறிப்பு :
இட நெருக்கடி காரணமாக
வெளிமாணவர்கள்
அனுமதிக்கப்பட மாட்டார்கள்.
இந்நிறுவனங்களில் கல்வி பயிலும்
மாணவர்கள் மட்டுமே
பங்குகொள்ள முடியும் என்பதை
அறியத்தருகின்றேன்.
★ கட்டணம் அறவிடப்படமாட்டாது.
(62653)

PC System
இன்
Mega Offer

* DISH ANTENNA'S Rs. 7750/= இல் இருந்து....
* DISH TV ACTIVATION செய்து கொடுக்கப்படும்...
* CABLE TV சம்பந்தமான தொழில்நுட்ப ஆலோசனைகள்
* CABLE TV உதிரிப்பாகங்கள்
* KTV CARD ACTIVATION செய்துக்கொடுக்கப்படும்.
PC System
(Total It Sollition Provdens)
(62659)
ஆலடிச் சந்தி, யாழ். வீதி,
மானிப்பாய்.
(நேர வரவும்)


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 13.07.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org